# ஆத்மஜோதி

( தை — 1980 )




ஆத்மநேயம் பூத்துப் பொலிக

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே
-சுத்தானந்தர்

ATHMAJOTHI NAWALAPITIYA

ஆசிரியர்: நா. முத்தையா

ஜோதி: 32 — சித்தார்த்தி ௵ தை ௴ 1௳ — (15-1-80) சுடர்: 3


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சூரிய வழிபாட்டுமுறை | — | 97 |
| சத்சங்க மகிமை | — | 98 |
| நடை உடை பாவனை | — | 99 |
| கலியின் குணபாவம் | — | 104 |
| ஐயம் தெளிதல் | — | 108 |
| இயந்திர மனிதர்கள் | — | 112 |
| நல்லொழுக்க வினாவிடை | — | 115 |
| சுவாமி ராமதாஸ் அருளுரை (40) | — | 118 |
| நெறியும் நெருஞ்சிலும் | — | 119 |
| கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியனாகும் இறைவன் | — | 123 |
| இந்துமத வினாவிடை | — | 126 |
| குருநாதர் திருவடியில் | — | 130 |
| சுசிந்திரம் | — | 139 |
| ஆசை அறுமின்கள்! | — | 143 |


## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்,

**அன்பு வணக்கம்**

தங்கள் கைகளில் கிடைக்கும் இந்தச் சுடர் 32ஆவது ஆண்டு மூன்றாவது சுடராகும். கடந்த 31 ஆண்டுகளாகச் சோதிக்குக் கிடைத்த அன்பர்களின் ஆதரவு எதிர்காலத்திலும் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு அன்பர் இல்லத்திலும் ஜோதி சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்பதே எமது தலையாய குறிக்கோள். ஒவ்வொரு சந்தா நேயரும் தத்தம் புதிய ஆண்டுச் சந்தா 15 ரூபாவை அனுப்பிவைப்பதோடு ஒவ்வொரு புதிய அங்கத்தவரை அறிமுகம் செய்துவைத்தால் ஜோதியின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டுபுரிந்தவர்களாவீர்கள்.

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி. (இலங்கை)

நா. முத்தையா

# சூரிய வழிபாட்டு முறை

பிரணவமந் திரம், தருப்பை பசுவின்சாணம்
பிழைஎன்று நெறிஆறும் பேணத்தக்க
வரமுதலாம் சூரியனை வழிபட்டு அந்த
வாரமதிற் பொங்கலிட்டு, வணங்கிப்போற்றி
விரதமிருப்போர்கருணை யுடையோராகில்
மேனியிடத் துள்ளனவாம் வியாதிமுற்றும்
திரமெனநில் லாமல் அதன்கிரணம்கண்ட
சிறுபனிபோல் ஆகும் இவைதிண்ணந்தானே.

சருவசம யங்களுக்கும் சாட்சி எந்தச்
சமயத்தோர் களும் இகழாத் தனிச்சொரூபம்
பொருவில்மதி யந்தனையுண்டு உமிழ்ந்திட்டுஎல்லாப்
புவனசரா சரமுமல்கப் புரியுந் தெய்வம்
வருவனபன் னிரண்டுவகைத் தெருஎன்றுலும்
வயமாவின் வீதிஅதன் வசத்த தாமால்
மருவும்அந்த மாதத்தில் தோற்றும்முன்னை
வாரமட்டி லேனும் அதை வணங்கல்நன்றே

சகளமொடு நிட்களமும் சொல்ப வான
சதுர்வேத சித்தாந்த சமயத்தோர்க்குள்
மகரசங்கராந்தி, அமாவாசை என்ன
வழங்கும்இரு விரதத்தின் வண்மைஎங்கும்
திகழ்பரிதிக் கேஆகும், அந்தத் தெய்வத
திருவருளால் தியாகிஎன்னச் சிறந்தோன்என்னப்
புகல்பெருமைக் கன்னன்வந்தான், திவாகரப்பேர்ப்
புலவன்வந்து ஓர் இலக்கணமும் புகன்றிட்டானே

ஆரியநூல் சொலுமூர்த்தி எதையானலும்
அநுட்டிப்போர் தவமுதிர்ச்சி யாகும்நாளில்
சூரியமண் டலத்தினையே நாடுவாரால்
சொல்லும் அந்தமூர்த்திக்குத் தொண்டர்என்னும்
சீரியகோ லங்களெல்லாம் பொருத்தமாகும்
தியானமின்றி உள்ளபடி தெரிசிக்கின்ற
பேரிகத்தும் பரத்தும்நலம் பெறுவாரேனும்
பிறவாத வீடுமட்டும் பெறமாட்டாரே.

# சத்சங்க மகிமை

1. சாதுக்கள் சங்கத்தையே—மனமே
        தஞ்ச மடைந்திடுவாய்
    சாதுசங்கத்தில் அல்லால்—மற்றொன்றிலும்
        சாந்தி வராதறிவாய்

2. பிள்ளைகள்போல் களிப்பார்—சித்தமற்ற
        பித்தரைப்போல் சிரிப்பார்—என்றும்
    வெள்ளைமனத்தினராம்—அவர்பாதம்
        வீழ்ந்து வணங்கிடுவாய்.

3. சாதனை மிக்குடையார்—எனினும்
        தம்மைப் புகழ்ந்தறியார்—விஸ்வ
    நாதனையே துதிப்பார்—அவர்பாதம்
        நாடி வணங்கிடுவாய்

4. வேண்டுதல் வேண்டாமை—இரண்டையும்
        விட்டு விளங்கிடுவார்—அருள்
    தூண்டின் நின்முன் வருவார்—அவர்பாதம்
        தொட்டு வணங்கிடுவாய்.

5. ஆழியைப்போல் ஞானம்—எனினும்
        ஆங்கு அலையற்றேயிருப்பார்—அவர்
    வாழியென்றால் வாழ்ந்தாய்—அவர்பாதம்
        வாழ்த்தி வணங்கிடுவாய்

6. சிந்தையின் சேர்க்கையின்றி—அவர்பல
        சித்துக்கள் செய்திடுவார்
    மந்திரவேல் மயமாம்—மேனியரை
        வாழ்த்தி வணங்கிடுவாய்

7. உள்ளக் களிம் பகலும்—உண்மைஒளி
        உன்னுள் உதித்துயரும்—அள்ள
    அள்ளக் குறையாமல்—பெருக்கெழும்
        ஆனந்தத் தேனாவாய்

8. ஞான சம்பூரணமே—சாதுசங்கம்
        நல்கிடும் மா மருந்தாம்
    ஆனதருந்திவிட்டால்—நீகூறுவ
        தானந்த மானந்தமே



# நடை உடை பாவனை

(ஆசிரியர்)

நடை, உடை, பாவனை நல்லாக இருந்தால் தானே நாலுபேர் மதிப்பார்கள் என்று சாதாரணமாகச் சொல்லுவதுண்டு. நடை என்ற சொல்லுக்கு நடத்தல் என்ற கருத்தும் உண்டு, ஒழுக்கம் என்ற கருத்தும் உண்டு. கூத்து, செலவு, செல்வம், தொடர்பு, நடத்தை, பழக்கம், முறை, வழக்கம், வழி, வாயிற்கடவை முற்றம் என்ற கருத்துகளையும் கொடுப்பது. இவற்றுள் எல்லாம் உயிராக இருப்பது ஒழுக்கம்.

> "ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
> உயிரினு மோம்பப் படும்"

என்பது வள்ளுவர் கூறிய ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தில் முதலாவது குறள் ஆகும். குற்றமற்ற பழக்கவழக்கங்கள் சேர்ந்த நல்ல நடத்தைக்கு ஒழுக்கமுடைமை என்று கூறப்படும். ஒவ்வொரு நாளும் நாம் செய்கிற ஒவ்வொரு செயலும் நல்ல நடத்தைக்கு ஒத்ததா என்று சீர்தூக்கிச் செய்யும் சீலமே ஒழுக்கமுடைமை.

நல்ல நடத்தை ஒருவனுக்கு மேன்மை உண்டாக்குவதனால் நல்ல நடத்தையே உயிரைக்காட்டிலும் உயர்ந்ததாக மதித்து மிகவுங்கருத்தோடு காக்கவேண்டும். உயிர் எல்லாருக்கும் இருக்கிறது. உயர்வு எல்லாருக்கும் இல்லை. ஒழுக்கத்தினால் தான் உயர்வுகிடைக்கிறது. அதனால் உயிரைக் காட்டிலும் சிறந்தது ஒழுக்கம். எல்லா நன்மைகளுக்கும் ஒழுக்கமே காரணம்.

பிராணன் எல்லாவற்றிலும் பெரியதானாலும் ஆசாரத்தைப்போல் மறுமைக்கு உதவி செய்யமாட்டாது. ஒரு

பெரியமகாத்மா டெல்லிக்கு வந்தார். எல்லோரும் அவரது உன்னத குணநலன்களைப் பாராட்டினர். சிலர் அவரது ஞானம்பற்றி வானளாவப் புகழ்ந்தனர். வேறுசிலர் அவரது தத்துவம் பற்றிப் புகழ்ந்தனர். மகாத்மாவுக்கு மிக மகிழ்ச்சி

ஒரு மனிதர் சொன்னார், ''மகாத்மாஜி! உங்களிடத்தில் ஒரு குறை இருக்கிறது.'' சுவாமிஜி பதில் கேள்வி போட்டார். ''என்னிடத்தில் என்ன குறை இருக்கிறது? என்னிடத்தில் குறையே இல்லை.'' ''உங்களிடத்தில் கோபம் இருக்கிறது. இதுதான் உங்களிடத்தில் உள்ள குறை.'' மகாத்மா பெரிதும் எரிச்சலுற்றார். அவர் தனது தலையை வெட்கத்தால் தொங்கவிட்டுக்கொண்டு உடனே டெல்லியைவிட்டு அகன்றார். ஒருசிறுகுறை எல்லாப் புகழையும் கெடுக்கிறது. குறை ஏதும் இல்லாத ஒழுக்கத்தை ஒவ்வொருவரும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மனிதனைச் சமூகத்திலே அந்தஸ்துள்ளவனாக மதிக்கச் செய்வதில் உடை முக்கியத்துவம் பெறுகிறது. பாடசாலைகளில் சீருடை வைப்பதில் ஒரு கருத்துண்டு. உடையைக் கொண்டு மாணவர் மத்தியிலே உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதம் உண்டாகாமலிருப்பதற்காகவேதான். ''கந்தையானாலும் கசக்கிக்கட்டு'' என்று சொல்வார்கள். உடைக்கு இரண்டு இலட்சணம். ஒன்று தூய்மை. அடுத்தது எளிமை. வெண்ணிற ஆடை எமது உள்ளத்தில் சாத்வீக குணத்தை வளர்க்கிறது. காந்திஜியின் உடை தூய்மையோடுகூடிய எளிமை. மானத்தைக் காப்பதற்கே உடை. தன்னைப் பிறருக்குக் காட்டிக் கொள்வதற்காக அல்ல. விலை உயர்ந்த ஆடையும், தனது உடலை மற்றையோருக்குக் காட்டிக்கொள்ளும் உடையும் தவிர்க்கவேண்டியவையாகும்.

''உண்பதுநாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடி நினைந் தெண்ணுவன''

என்பதுபற்றி நாம் நிறைய நிறையச் சிந்திக்கவேண்டும்.



''குஞ்சிஅழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல''

என்பதுபற்றியும் இக்காலத்தில் நிறையச் சிந்திக்கவேண்டும். சிந்தனை இன்றியே கண்ட பாவனையில் கொண்டை முடிவதே நமது வாழ்க்கையாக மாறிவிட்டது. மனதிற்குச் சாந்தியைக் கொடுக்கவல்லதும் கண்டோரின் உள்ளத்திலே தூய்மையான எண்ணத்தை உண்டாக்கவல்லதுமான உடையே நமக்கு வேண்டுவது. உடையின் நிறங்கள் நமது மனதின் கோணல்களை வெளிப்படுத்துகின்றன என்று பெரியோர் கூறுவர்.

சாவகச்சேரி

பாவனை என்ற சொல் எண்ணம், தியானம், நடத்தை, மாதிரி, நினைப்பு, தெளிகை, தியானிக்கப்படுவது, அடையாளம், ஒப்பு, போலி, என்ற பொருட்களில் வருவது. இறைவணக்கம் செய்வோர் ஒரு உருவமாக இறைவனைப் பாவிப்பது வழக்கம். காரணம் அப்போதுதான் மனது ஒடுங்கும். மனது ஒடுங்கும் அளவுக்கு பக்தி பெருகும். பக்தி பெருகினால் பாடி உருகலாம். அதனால் நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்து உருகுகின்றது.

கோயிலுக்குப் போகிறோம். கோயிலிலுள்ள திருஉருவத்தை பொன்னாலும் பட்டாலும் பூவாலும் அலங்கரித்து வைத்திருக்கின்றார்கள். அத் திருஉருவத்தை நன்கு பார்த்து-அடிக்கடி பார்த்து உள்ளமாகிய திரையில் எழுதுகின்றோம். கோயிலுக்குப் போனால் கோயிலிலுள்ள திருஉருவைப் பார்த்துப் பக்தி செய்கின்றோம். வீட்டில் இருந்தால் வீட்டில் உள்ள படத்தைப் பார்த்துப் பக்தி செய்கின்றோம். வீடும் கோயிலும் தவிர்ந்த இடங்களில் என் செய்வது? அதற்காகத்தான் மனதில் இறைவன் திருஉருவை எழுதுகின்றோம். இதனை அப்பர் சுவாமிகள்.

''உயிராவணம் இருந்து உற்றுநோக்கி உள்ளக் கிழியின்
உரு எழுதி''

என்று குறிப்பிடுகின்றார். முதலில் பாவித்து இறைஞ்சிய திருஉருவம் ஈற்றில் அனுபவப் பொருளாக மாறுகிறது.

யாரோ ஒருவரை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருப்போம். அவர்தான் வருகிறார் என்று தீர்மானித்து விடுவோம். அவர் கிட்ட வரவரஅவரல்ல என்ற ஞானம் பிறக்கிறது. முதலில் எமது பகுதியிலிருந்த உருவமே தூரத்தில் வரும் உருவத்தைப் பிரதிபலித்துக்காட்டியது. மனத்தினுள்ள பாவந்தான் அதற்குக் காரணம். அது போலவே பரிபூரணமான அன்பு இருக்குமானால் ஒன்றும் இல்லாத இடத்திலும் நம்முடைய அன்புக்குப் பாத்திரமானவருடைய உருவம் தோன்றும்.

சீதா பிராட்டியின் அழகை சூர்ப்பனகை வாயிலாக இராவணன் கேட்டான். கேட்டவுடன் அந்தப்பிராட்டியிடம் ஆசை கொண்டான். அவன் சீதையைப் பார்த்ததில்லை. ஆனாலும் சூர்ப்பனகைவருணித்த வருணனையைக் கொண்டு எப்போதும் பிராட்டியின் நினைவாகவே இருந்தான். ஒரு நாள் அவனுக்குத் திடீரென்று வெளியில் ஒரு பெண்ணின் தோற்றம் தோன்றியது. அந்த அழகிய தோற்றத்தைக் கண்டவுடன் அவள்தான் சீதையாக இருக்கவேண்டுமென்று எண்ணினான். சூர்ப்பனகையை உடனே அழைத்து இவள்தான் நீ சொன்ன சீதையோ? பார்; என்று புறவெளியைக் காட்டினான். சூர்ப்பனகை இராமன் நினைவாக இருந்தவள். அவ்வெறுவெளியை இவர்தான் அந்த வல்வில் இராமன் என்றாள். வெறும் வெளியில் அவரவர்களுடைய மனோபாவத்திற்கேற்றபடி உருவம் தோன்றியது.

இப்படிப்பட்டதொரு பாவனையே ஆத்மீகத்திலும் தியானநிலையில் முதலில் காணப்படுகிறது. அவரவர் சாதனையின் வலிவுக்குத்தக்கதாகவும் மனோநிலைக்குத் தக்கதாகவும் காட்சிகள் வித்தியாசப்படும். ஆத்மீக சாதனைகள் ஒன்றாக இருக்கலாம். அனுபவங்கள் இரண்டுபேருக்கு ஒன்றுபோல் இல்லை.



உண்மைக்கவிஞன் 'பாவனை' என்ற ஞான விமானத்தைத் துணைக்கொண்டுதான் எந்தக்காலத்தும் சஞ்சரிக்கிறான். எந்த உலகத்திலும் சஞ்சரிக்கிறான். மக்கள் உள்ளங்களிலும் சஞ்சரிக்கிறான். கூடுவிட்டுக் கூடுபாய்ந்து அரக்கர் உள்ளங்களிலே, அமரர் உள்ளங்களிலே சஞ்சரிக்கிறான். இராமனுடைய உள்ளத்தைப்பாவனை செய்தமை கம்பனுக்குப் பெருமை இல்லை. இராவணனுடைய உள்ளத்தைப்பாவனை செய்தானே அதுதான் கம்பனுக்குப் பெருமை. சீதையைப் பாவனைசெய்த கம்பன் சூர்ப்பனகையைப் பாவனைசெய்தானே அதுதான் உண்மைக் கவித்துவம்.

ஆண்டாள் பாவை நோன்பு நோற்றது பாவனையால் தான்; செயலைக் கொண்டு அல்ல; பாசுரத்தைக் கொண்டு தான். மனிதன் எதனைப்பாவனை செய்கிறானோ, அது ஆகிறான் என்பதுதான் உண்மை.

தேவித்திருத்தலகீர்த்தனை—6

## மாத்தளை முத்துமாரி அம்மன்

—"ஆனந்தபைரவி"

ராகம்: பிருந்தாவன சாரங்கா.

பல்லவி

வாக்குத் தவறவேண்டாம் வடிவழகி உமையே
மாத்தளை பதியில் அன்றோர் மாசி மகத்தில் தந்த
(வாக்கு)

அநுபல்லவி

எந்தன் திருமணத்தின் இனிய தினத்தினில்நீ
வந்து வரம்தந்து வாழ்த்தும் உரைப்பன் என்ற
(வாக்கு)

சரணங்கள்

தேர்முகம் நோக்கிவரும் தேவியுன் திருவடிக்கீழ்
தேடிவந் தே எந்தன் வேண்டுதல் நான் உரைத்தேன்
சேர்த்தல் எனில்இதயம் சேர்ந்தவளை எனக்கே
சேர்த்தல் உன் கடமை என்றே கேட்கையில் நீ உரைத்த
(வாக்கு)

தேர்த்தட்டில் நீ அமர்ந்த வேளையில் நான் உனது
திருவடிக் கீழ்க் கரங்கள் ஏந்திக் கசிந்து நின்றேன்
காத்திருந்த எந்தன் கரங்களில் மலர்வீசிக்
கண்டா மணிஒலித்தே 'ஓம்' 'ஓம்' என்றே உரைத்த
((வாக்குத்)

# கலியின் குணபாவம்

மைத்திரேயரே! மாபெரும் அறிஞரான வேதவியாசரும் கலிவிஷயத்தில் ஒரு விசேடத்தைச் சொல்லியிருக்கிறார். ஒரு காலத்தில் தவமுனிவர்களிடையே ஒரு புண்ணியவாதம் உண்டாயிற்று. அதாவது. ''எந்தக் காலத்தில் கொஞ்சம் தருமம் செய்தாலும் பயன் அதிகமாகக் கிடைக்கும்? எவர் எட்படிப்பட்ட தருமத்தை எளிதில் செய்வதற்கு உரியவர்கள்? என்பதே அவர்களது விவாதமாகிவிட்டது. எனவே இந்த விஷயத்தைப் பற்றி, சந்தேகம் நீங்கி, உண்மையை அறிந்துகொள்வதற்காக, முனிவர்கள் அனைவரும் வேதவியாச மகரிஷியின் ஆச்சிரமத்தை நோக்கிச் சென்றார்கள்.

அப்போது, என்மகனான வேதவியாசர், கங்கைநதியிலே நீராடிக்கொண்டிருந்தார். அதனால் அந்த முனிவர்கள் அவர் நீராடி விட்டு வரும் வரையில், அவரை எதிர்பார்த்துக்கொண்டு கரையோரமாக இருந்த மரங்களின் நிழல்களில் உட்கார்ந்திருந்தனர். அப்போது கங்கா தீர்த்தத்தில் மூழ்கிக் குளித்துக்கொண்டிருந்த என் குமாரர் முழுக்கிலிருந்து எழுந்து ''சூத்திரன்சாது; கலிசாது'' என்று அந்தச் சந்தேகம் தெளிவுபெற அவரைத் தேடி வந்த முனிவர்களின் காதுகளில் கேட்கும்படி சொல்லி விட்டு, மீண்டும் நீரில் மூழ்கினார். பிறகு அவர் எழுந்து, ''சாது சாது சூத்திரா! நீ மகா புண்ணியவானாக இருக்கிறாய்!'' என்று சொன்னார். மறுபடியும் மூழ்கி எழுந்த அவ்வியாச முனிவர், ''பெண்களே புண்ணியவதிகள் அவர்களைவிடப் புண்ணிய முடையவர்கள் யார்தான் இருக்கிறார்கள்?'' என்று சொன்னார்.



பிறகு அவர் நன்றாக மூழ்கிக் குளித்து நீராடி விட்டு ஆசனாதி சகல அனுஷ்டானங்களையும் செய்து விட்டு, வீற்றிருந்தார். சந்தேகம் தெளிவுபெற என் மகனைத் தேடி வந்த முனிவர்கள் வேதவியாசரை வணங்கி நின்றனர். அவர்களை வேதவியாசர் உட்காரச் சொல்லி ''நீங்கள் இங்கு எதற்காக வந்தீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள் சுவாமி! நாங்கள் ஒரு சந்தேகத்தை தீர்த்துக் கொள்ளவே, உங்களைத் தேடிவந்தோம். அது இருக்கட்டும். ''கலிசாது; சூத்திரன் சாது; பெண்கள் புண்ணியவதிகள்'' என்று நீங்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டே நீரில் மூழ்கி எழுந்தீர்களே? அதைப் பற்றி நாங்கள் முதலில் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்! மறைக்க வேண்டாத பட்சத்தில் அதை எங்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். பிறகு நாங்கள் எண்ணி வந்ததைப் பற்றி தங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்கிறோம்'' என்றார்கள்.

வேதவியாசர் புன்னகை செய்த வண்ணம் அவர்களுக்குக் கூறலானார். ''ஓ தவமுனிவர்களே! சாது! சாது என்று எதனால் சொன்னேனோ, அதைச் சொல்கிறேன் கேளுங்கள். எந்தப் புண்ணியத்தைக் கிருதயுகத்திலே செய்தால் அது பத்து ஆண்டுகளில் சித்திக்குமோ, அதுவே திரேதாயுகத்தில் ஒரே ஆண்டில் சித்திக்கும், அதுவே துவாபரயுகத்தில் ஒரு மாதத்தில் சித்திக்கும். கலியுகத்திலோ ஒரே நாளில் பயன் வந்து விடும். இது போலவே தவம், பிரமசரியம், ஜபம் முதலிய எதற்கும் உரிய பயனை மனிதன் மூன்றுயுகங்களிலும் பெறுவதிலும் மிகவும் எளிதாகப் பெறுவதாலேயே, ''கலிசாது'' என்று சொன்னேன். இன்னுங்கேளுங்கள். கிருதயுகத்திலே யோகநிஷ்டையிலிருந்து தியானம் செய்வதனாலும், திரேதாயுகத்தில் யாகம் செய்வதனாலும் துவாபரயுகத்தில் அர்ச்சிப்பதனாலும் எந்தப் பயன் உண்டாகுமோ, அது கலியுகத்தில் ஸ்ரீ கேசவனுடைய நாமசங்கீர்த்தனம் செய்வதாலேயே கிடைத்துவிடும். தருமம் அறிந்த தவத்தோரே! மனிதன் இந்தக் கலியுகத்தில் சிறிதளவு சிரமத்தினாலேயே பெருமளவு தருமத்தை அடைவானாதலால், கலியை நான் கொண்டாடுகிறேன்.

இனி, சூத்திரன் சாது என்றுநான் சொன்னதை விளக்கமாகச் சொல்கிறேன். பிராமணாதிகள் விரதம் அனுஷ்டானங்களில் தவறாமல் இருந்துகொண்டு, முதலாவது வேதங்களை ஓதவேண்டும். பிறகு தரும வழியால் சம்பாதித்த பொருளைக் கொண்டு, யாகங்களை விதிப்படி செய்யவேண்டும். பிராமணாதியருக்குப் பகவானைப் பற்றிய பேச்சுகளைத் தவிர, வீண் பேச்சுக்கள் பேசுவதும், எம்பிரானுக்குச் சமர்ப்பிக்காத அன்னாதிகளைப் புசிப்பதும், டம்பத்துக்கும் லாபத்துக்கும் யாகங்களைச்செய்வதும் பாதகமாகும். ஆகையால் அவர்கள் எப்போதும் மனம், வாக்கு, காயங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். மேலும் இரு பிறப்பாளருக்கு எதையும் விதிப்படி செய்யாமற் போனால் அது குற்றமாகும். போஜனாதிகளைக்கூட இஷ்டப்படி செய்யவொண்ணாமல் விதிப்படி செய்ய வேண்டியவையாக இருப்பதால், யாவுமே அவர்களுக்கு பராதீனமானவை. அதனால் அவர்கள் எதையும் மிகவும் வருந்தித் தாங்கள் அடையவேண்டிய உலகங்களை ஜெயிக்கவேண்டும்

சூத்திரனோ வேத அத்தியயனம், அக்கினி, யக்ஞம் முதலியவைகளின்றி, பாக யக்ஞாதிகாரமுடையவனாய் முந்திய பிராமணாதியருக்குப் பணிவிடை செய்வதினாலேயே அத்தகைய உத்தம உலகங்களை அடைந்துவிட முடிகிறது. ஆகையால் அவனைவிடப் புண்ணியவான் யார் உண்டு? ஓ முனிவர்களே! சூத்திரனுக்கு இன்னது உண்ணத்தக்கது, இன்னது உண்ணத்தகாதது, இது குடிக்கத்தக்கது, இது குடிக்கத்தகாதது என்ற நியமம் இல்லாமையால், ''சூத்திரன் சாது'' என்று நான் சொன்னேன்.

ஆடவர்கள் தத்தமக்குரிய தருமத்தினால் பொருள்சம்பாதிக்கவேண்டும். சம்பாதித்தபொருளை நல்லவைகளுக்குச் செலவுசெய்ய வேண்டும். இவ்விதமாகப் பொருளை ஈட்டுவதிலும் அதைச் சம்பாதிப்பதிலும். எத்தனைபிரயாசைகள் இருக்கின்றன பாருங்கள். இதை நல் வழியில் செலவழிப்பதிலோ இரட்டிப்புச் சிரமம் இருக்கிறது. இவ்விதமான பலவகைக் கிலேசங்களினால் ஆடவர்கள் பிரஜாபத்தியம் முதலிய உலகங்களை வெல்கிறார்கள். பெண்களோ மனோவாக்குக் காயங்களினாலே தம் கணவர்களுக்கு அனுகூலமாக இருந்துகொண்டு சிசுருஷைகளைச் செய்து வந்தாலே கணவன் அடையும்உலகங்களைஎளிதில்அடைந்துவிடுகிறார்கள். இவ்விதம் அதிகச் சிரமம் இல்லாமல், வருந்திப் பெறும் உலகங்களை பெறுவதால் மூன்றாவதாக பெண்கள் சாதுக்கள் என்றேன். பிராமண உத்தமர்களே! நீங்கள் கேட்டபடி நான் சொன்னவற்றுக்குக் காரணங்களைச் சொன்னேன். இனி நீங்கள் வந்த காரியத்தைச் சொல்லவேண்டும். அதற்கும் நான் பதில்சொல்கிறேன்'' என்றார் வியாசர்.



''முனி சிரேஷ்டரே; நாங்கள் கேட்க வந்த சந்தேகங்கள் இப்போது நீங்கள் கூறிய விளக்க உரைகளிலேயே அடங்கி உள்ளன. இனி நாங்கள் கேட்க வேண்டியவை வேறில்லை'' என்றார்கள் முனிவர்கள்.

பிறகு, அந்த கிருஷ்ண துவைபபாயனர் சிரித்து, ''நான் திவ்யஞானத்தால், உங்கள் காரியத்தை அறிந்து அதைக் குறித்துத்தான் கலி சாது; சூத்திரன் சாது; ஸ்திரீகள் சாதுக்கள் என்று சொன்னேன். அற்ப முயற்சியிலேயே கலியில் தருமம் பலிக்கிறது. தயை, சாந்தி முதலிய ஆன்மீக குணங்களாகிய தண்ணீர்களினால் அவர்கள் பாவங்களாகிய மலங்களைக் கழுவிக்கொள்ளுகிறார்கள். சூத்திரர் பிராமணாதியருக்குப் பணிவிடை செய்வதினாலேயே பேறு பெறுகின்றனர். பெண்டிரும் கணவருக்குப் பணி செய்து ஆயாசம் இல்லாமலேயே நற்கதியை அடைகிறார்கள். ஆகையால் இந்த மூவரும் புண்ணியசாலிகள் என்பது என் கருத்து. கிருதயுகாதி காலங்களிலும், அந்தணர் முதலியோருக்குத் தர்மம் சம்பாதிப்பதில் பெரிய ஆயாசம் உள்ளது. ''இதைப்பற்றி நான் பேசியதில் உங்கள் சந்தேகம் தீர்ந்தது அல்லவா? இனி நான் உங்களுக்குச் செய்ய வேண்டுவது என்ன?'' என்று கேட்க, அவர்கள் சந்தேகம் நீங்கிய மகிழ்ச்சியோடு அவரை வணங்கி விடைபெற்றுச் சென்றார்கள்.

—விஷ்ணுபுராணம்

# ஐயம் தெளிதல்

**முன்காலங்களில் நம்மோடு நம்காரியங்களில் கலந்து கொண்டிருந்ததாகக் கூறப்படும் ரிஷிகள், மஹாத்மாக்கள் இப்போதும் இருக்கிறார்களா? அப்படி இருந்தால் இப்போது ஏன் நம்முடன் தொடர்புவைத்துக் கொள்வதில்லை?**

நமது புராண இதிகாசங்களில் மகரிஷிகள், ஜீவன் முக்தர்கள் முதலியோர்கள் சாதாரண ஜனங்களிடையில் கலந்துகொண்டு அவர்களுக்கு வேண்டிய சகாயங்களைச் செய்துகொண்டிருந்ததாகக்கூறப்பட்டிருப்பதுஉண்மையே. அவ்வளவு அளவிற்கு இக்காலத்தில் அந்த மகான்கள் நம்முடன் தொடர்புவைத்துக் கொள்ளாமலிருப்பதும் ஒருவாறு உண்மையே. ஆனால் அந்த மகான்கள் இன்னும் இருக்கிறார்கள். நம்முடைய நலத்திற்காக உழைத்தும் வருகிறார்கள். அவ்விதம் நம்முடைய நன்மையையே கோரி அவர்கள் உழைப்பது அவர்களுக்கு இயற்கை. மகான்சங்கராச்சாரியார் அவர்களைப்பற்றிக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

சாந்த மூர்த்திகளான மகான்களான சத்சனங்கள் இன்றும் வசிக்கிறார்கள். கோடை வெயிலினால் பீடிக்கப்பட்ட உலகத்திற்கு வசந்தகாலம் இதம் அளிப்பதுபோல் உலக ஜனங்களுக்கு நன்மையைச் செய்துகொண்டிருக்கிறார்கள். பயங்கரமான பவ சாகரத்தைக் கடந்தவர்கள், அதுபோலவே மற்ற ஜீவன்களும் அந்தப் பவசாகரத்தைக் கடக்க வேண்டி, ஒரு காரணத்தையும் மேற்கொள்ளாமல் அவர்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

முத்தியை அடைந்தவர்கள்; வேற்றுமை என்னும் அஞ்ஞானத்தைக் கடந்தவர்கள்; இறைவனோடும், அதனால்



மற்ற ஜீவன்களோடும் ஐக்கியத்தை அனுபவிக்கிறவர்கள். அந்த மகான்கள் நாம் இந்தப் பவ சாகரத்தில் மூழ்கித் தவிப்பதைக் கண்டு அவர்கள் மனமிளகி நம்மையும் அவர்கள் அடைந்திருக்கும் பிரமானந்தப் பதவியை அடையும்படி செய்ய முயலுகிறார்கள். அதற்காகவே இவ்வுலகில் ஜீவன் முக்தர்களாக இருந்து பலவிதமான உதவிகளை நமக்குப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அநேக சிஷ்யர்களை மேற்கொண்டு அவர்களுக்கு உயர்ந்த உபதேசங்களைக் கொடுத்து அவர்களை முன்னேறச் செய்வதுமல்லாமல் அந்தச் சிஷ்யர்கள் மூலம் உலகிற்கும் பல நலன்களைப் புரிகிறார்கள். அவர்களிருப்பிடம் அந்தச் சிஷ்யர்களுக்குத் தெரியும். இன்னும் அத்தகைய மகான்களோடு தொடர்புள்ள பல சிஷ்யர்கள் இருக்கிறார்கள். ஆத்மீக உணர்ச்சியுள்ள ஜீவன்கள் அம்மகான்களுடைய பார்வையில் படத்தான் படுவார்கள். எப்படியாவது அவர்களுடன் தொடர்பு ஏற்படும். ஆனால் அம்மகான்கள் யாரையும் நிர்ப்பந்தப்படுத்தி ''யோகமார்க்கத்தைக் கடைப்பிடி'' என்று தூண்டமாட்டார்கள். தனக்கே அந்த ஆத்மீக மார்க்கத்தில் உற்சாகம் ஏற்படும் ஜீவன்களுக்கு எப்படியாவது அம்மகான்களோடு தொடர்பு ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், ஏன் அம்மகான்கள் பகிரங்கமாக வந்து நம்முடன் உலாவுவதில்லை என்று கேட்டால், அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவர்களுடைய ஸ்தூல சூக்குமசரீரங்கள் மிகவும் பரிசுத்தமானவை. அந்தப் பரிசுத்தப் மாசுபடாதிருக்கத்தான் அவர்கள் ஒதுங்கி வனாந்தரங்களில் தங்கள் ஆச்சிரமங்களில் வசிக்கிறார்கள். பலவித துர்க்கந்தங்களும், இழிவான காற்றுகளும் எண்ணங்களும் அமரிக்கையில்லாமையும் நிறைந்திருக்கும் நம்மிடையில் அவர்கள் வருவதானால் அவர்களது பரிசுத்த சரீரங்கள் இவற்றைத் தாங்கமுடியாது. நமக்கே சில இடங்களில் சென்றால் அந்த இடத்திலுள்ள சூழ்நிலையை நம்மால் சகிக்கமுடிவதில்லையே. தங்களுடைய பரிசுத்தத்தை

காப்பாற்றிக்கொள்ள பிரயத்தனம் செய்வதிலேயே அவர்கள் கவனம் செலுத்த வேண்டிவரலாம். நமக்கு உதவிபுரிய இடையில்லாமல் போய்விடலாம். அதனால் எந்த இடங்களுக்கு அவர்கள் பின்போகமுடியுமோ அங்குதான் செல்வார்கள். மற்ற இடங்களுக்குத் தங்கள் சிஷ்யர்களை அனுப்பி அவர்கள் மூலம் தங்கள் காரியங்களை ஒருவாறு முடித்துக்கொள்வார்கள். தற்கால மனித சமூக நடவடிக்கைகள் ஆத்மீக உணர்ச்சிக்கு பொருத்தமில்லாதபடி இருப்பதால் தான் இப்படி அவர்கள் ஒதுங்கி நிற்க வேண்டி வருகிறது.

மேலும், அம்மகான்கள் நம்முடன் கலந்துகொண்டாலும் விசேட பிரயோசனம் உண்டா? அவர்கள் மகான்கள் என்பது நமக்குத் தெரியும் என்பது நிச்சயமா? அவர்கள் தாம் பெரியவர்கள் என்று கூறிக்கொள்வார்களா! மாட்டவே மாட்டார்கள். மகான்களைக் கண்டால் அவர்கள் மகான்கள்தான் என்று உணர்வது எளிதல்ல. சில சமயங்களில் விபரீதம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். அவர்களுடைய தேஜஸை தாங்கமுடியாமல் நாம் தடுமாறலாம். தவறான அபிப்பிராயம் கொள்ளலாம். மகான்களுடைய சமீபத்தில் பழகி அவர்களுடைய மகத்துவத்தை அறிய நமக்குத் திறம் வேண்டும். எந்த விஷயத்திலும் சரி, ஒருவரிடத்தில் திறத்தை அறிய வேண்டுமானால், அந்த விஷயத்தைப் பற்றின வரையில் நம்மிடத்திலும் கொஞ்சம் திறம் வேண்டும். ஒரு சங்கீத வித்துவானுடைய திறத்தை நன்கறிய நம்மிடத்தில் கொஞ்சமாவது சங்கீத உணர்ச்சி இருக்க வேண்டுமல்லவா? ஒரு பெரிய சமஸ்கிருத பண்டிதருடைய பெருமையை அறிய நமக்குக் கொஞ்சமாவது சமஸ்கிருத பாஷா ஞானம் வேண்டாமா? அதுபோலவே ஆத்மீக மார்க்கத்தில் உயர்ந்த பதவியை அடைந்திருக்கும் ஒரு மகாத்மாவின் பெருமையை உணர வேண்டுமானால் அந்த ஆத்மீக உணர்ச்சி கொஞ்சமாவது நம்மிடத்தில் இருக்க வேண்டியது அவசியம்.

தசரத மகாராஜாவின் பிள்ளை ஸ்ரீ ராமன் ஒரு பெரிய ஆத்மா என்பது தகப்பனுக்குத் தெரியவில்லை. காட்டிலிருந்து வந்த விசுவாமித்திர முனிவருக்குத் தெரிந்தது. அம்முனிவர் தசரதனுக்குக் கூறினது கவனிக்கத்தக்கது. ''தசரதா! ஸ்ரீராமன் உண்மையான பராக்கிரமமுள்ள பெரிய ஆத்மா என்பது எனக்குத் தெரியும். எனக்கு மட்டுமல்ல, என்னைப்போல தபசிகளாய் விளங்கும் வசிட்டர் முதலியோர்களுக்கும் தெரியும் என்று விசுவாமித்திரர் சொன்னார். ஆகையால் ஒரு மகாத்மாவைப் பார்த்த மாத்திரத்தில் அவருடைய பெருமையை அறிய முடியுமென்பது சொல்லமுடியாது. யார் கண்டார்கள்?



இன்னும் அனேக மகாத்மாக்கள் உலாவிக்கொண்டிருக்கலாம். ஜனங்கள் அவர்களை ஏதோ சாதாரணமானவர்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கலாம். நமக்குத் தெரியாததால் அத்தகைய மகான்கள் நம்மிடையில் நடமாடுவது இல்லையென்று சொல்ல இயலாது. -தர்மஜோதி

## ஸ்ரீ ரமண பகவான்

உலகம் உய்ய வழிகாட்டுவதற்காக அவ்வப்பொழுது தோன்றும் அவதார புருஷர்கள் வரிசையில் 'பகவான்' ரமண மகா முனிவரும் ஒருவர்.

சிறு வயதிலேயே அருள் அழைப்பைப் பெற்று, தீவிர வைராக்கியத்தோடு சாதனை செய்து, உண்மையை உணர்ந்து, நடமாடும் கோயிலாக நின்ற பெருமான் அவர்.

அவரிடமிருந்து பெருகிய அருள் ஒளி, கடல்களையும் கடந்து வீசி, மேல்நாட்டு அறிவாளிகளையும் வசீகரித்துச் சீலர்களாக்கும் பெருமை கொண்டிருந்தது.

இவர் வாக்கிலிருந்து தோன்றிய நூல்களும், உபதேசங்களும், வினாவிடைகளும் இன்றும் நின்று ஆத்ம விசுவாசிகளின் சந்தேகங்களைப் போக்கும் வழிகாட்டிகளாகத் திகழ்கின்றன.

# இயந்திர மனிதர்கள்

என்.கே. வேலன் பி.ஏ.

இக்காலத்தில் 'எலெக்ட்ரான்' என்னும் மின் அணுக்களின் உதவியால் அற்புதமான கருவிகள் இயக்கப்படுகின்றன. 'ரொபாட்' என்னும் மனித இயந்திரங்கள் இம்முறையில் செய்யப்படுகின்றன. இப்பொறிகள் மனித உருவத்துடன் நம்மைப்போல் பணிபுரிகின்றன.

அண்மையில் அமெரிக்காவில் மனித இயந்திரக் காட்சி ஒன்று நடைபெற்றது. உலக நாடுகள் எல்லாம் இதில் கலந்துகொண்டன. மனித இயந்திரங்களைத் தொழிற்சாலைகளில் பயன்படுத்தலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. மனித இயந்திரம் ஒன்று நீண்ட கரங்களுடன் காணப்பட்டது. நாம் விரும்பிக் கேட்கும் சித்திரங்களை அது வரைந்துகாட்டியது. ஏறக்குறைய 2 மீட்டர் உயரமும் 1 மீட்டர் அகலமும் உள்ள பெரிய படங்களை அதனால் வரைய முடிந்தது. அதன் மணிக்கட்டு நன்றாகச் சுழலக் கூடியதாகவும் கைகளை வீசுவதற்கு ஏற்றமுறையிலும் செய்யப்பட்டிருந்தது.

மனிதர்களால் கூட வரைய முடியாத மிகச்சிறந்த ஓவியங்களை ஓர் இயந்திரம் வரைதலைக்கண்டு மக்கள் வியப்புற்றனர். ஓவியங்களை இப்பொறி கண்களால் பார்த்து வரையவில்லை. இயந்திர மூளை இயக்குநர் கற்றுக் கொடுத்த முறைகளை நினைவில் வைத்துக்கொண்டு நன்றாக வேலை செய்தது. இதன் விலை 65.000 டாலர்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. கண்பார்வையுள்ள இயந்திரம் ஒன்று இக்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. அதன் கண்களில் படம் பிடிக்கும் மின்சாரக் கருவிகள் பொருத்தப் பட்டிருந்தன. அதன் கழுத்து நீண்டிருந்தது.



உலோகத்தினால் செய்யப்பட்டிருந்தது. அது பகடைக் காய்களை உருட்டி விளையாடிக்கொண்டிருந்தது. உருண்டு ஓடும் காய்களை எடுத்துக் கோப்பையில் போட்டது. அதனைக் கண்டு மக்கள் வியப்படைந்தனர்.

மற்றோர் இயந்திரம் 2.25 மீட்டர் உயரம் இருந்தது. அஃது உடற்பயிற்சி செய்து காண்பித்தது. ஆசிரியர் மாணவர்களுக்கு உடற்பயிற்சி கற்றுக்கொடுப்பதுபோல அமைக்கப்பட்டிருந்தது. பச்சை நிறப் பொருள்களையும் சிவப்பு நிறப் பொருள்களையும் கலந்து வைத்தால் பச்சைப் பொருட்களை மட்டும் பொறுக்கி எடுத்துக் கொடுத்தது. மின் அணுக்களின் ஆற்றலினால் தான் இப்பொறிகள் எல்லாம் இயக்கப்பட்டன.

அமெரிக்க நாட்டில் ஓர் ஆலையில் மனித இயந்திரம் ஒன்று துணிகளின் ஓரங்களை தைத்து, மடித்து, மூட்டை கட்டி அனுப்புகின்றது. மனிதர்களைவிட ஒழுங்காகவும் விரைவாகவும் செயல்புரிகின்றது. இதனால் உற்பத்தி செய்யும் செலவு குறைகின்றதெனக் கூறப்படுகின்றது.

**''உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ''**

என்றபடி அறிஞர்களின் இடைவிடாத உழைப்பினால் பல புதிய பொருள்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

காட்சிப் பொருள்களில் 1.35 மீட்டர் உயரமுள்ள மனித இயந்திரம் ஒன்று இருந்தது. அஃது ஆடிப்பாடி அனைவரையும் மகிழ்வித்தது. குதித்தல், வளைதல், சாய்தல், திரும்புதல் ஆகியவற்றை எல்லாம் வியப்புறும் வண்ணம் செய்தது. இயக்குநருக்கு வணக்கம் செலுத்தியது. உயிருள்ள மனிதனைப் போலவே அது நடித்தது. நீலநிறமான பட்டுத்துணி ஒன்றை விரித்து அதன்மேல் நாட்டியம் ஆடிற்று.

மனித இயந்திரங்களைப் பல வழிகளில் பயன்படுத்துகின்றனர். இவற்றைப் பூதங்களைப் போல் உருவாக்கிப் பகைவரின் மேல் ஏவிவிடலாம். இயந்திர மனிதர்களை

அழித்தல் தொழிலுக்குப் பயன்படுத்தாமல் ஆக்கப் பணிகளுக்கு பயன்படுத்தலாம். மனிதனைப் போன்ற இயந்திரங்கள் செய்வது முதலில் கற்பனைக் கதைகளில் வந்தது. இப்பொழுது உண்மையாகவே நிகழ்ந்து விட்டது. ஓர் அறிஞர் பக்கத்து வீட்டுப் பையனைப் போலவே ஒரு இயந்திரப் பையனைச் செய்தார். அவன் உடம்பிற்குள் இருந்த பொறிமின் அணுக்களின் உதவியால் இயங்கிற்று. இயந்திரப் பையன் இயக்குநரின் கையிலிருந்து தப்பிச் சென்று பக்கத்து வீட்டு பையனுடன் சேர்ந்து விளையாடினான். இருவருடைய தோற்றங்களும் ஒன்றுபோலிருந்தன.

பக்கத்து வீட்டுப் பையன் சரியாகப் பாடங்களைப் படிக்க மாட்டான். கணித பாடத்தில் பின் தங்கியவனாக இருந்தான். ஓட்டப் பந்தயங்களில் சேரமாட்டான். இயந்திரப் பையன் சோம்பேறிப் பையனை மறைத்து வைத்து விட்டுப் பள்ளிக்குச் சென்றான். எல்லாப் பாடங்களிலும் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றான். ஓட்டப் பந்தயங்களில் முதல் பரிசு பெற்றான். ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் வியப்புற்றனர். ''எலெக்ரானிக்'' என்ற ஆற்றலினால்இயந்திரப்பையன்ஓடிஆடிக்கொண்டிருந்தான். மின் ஆற்றலை இழந்த உடன் அவன் கீழே சாய்ந்து விட்டான். உண்மை வெளிப்பட்டது. இயக்குநர் ஓடிவந்து மின் சக்தியை ஏற்றினார். இயந்திரம் புத்துயிர் பெற்றது. அறிஞர் அதனைத் தம்முடன் எடுத்துச்சென்றார். பக்கத்து வீட்டுப் பையனைத் தேடிக்கண்டு பிடித்துப் பள்ளிக்கு அனுப்பினார். இவ்வாறு கதை முடிகின்றது.

எதிர்காலத்தில் இதைப்போன்ற பல அற்புதங்கள் நிகழக்கூடும். மனித இயந்திரங்களை வான உலகங்களுக்கு அனுப்பலாம். நிலவில் மின்சார நிலையங்களை அமைக்கலாம். நமக்கு வேண்டிய அளவு மின் ஆற்றல் கிடைத்துக் கொண்டே இருக்கும். பற்றாக்குறை நீங்கிவிடும் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

நன்றி, செந்தமிழ்ச் செல்வி



# நல்லொழுக்க வினாவிடை

திரு. ப. இராமநாதபிள்ளை

7. கடவுள் எப்படிப் பட்டவர்?

பேரறிவும் பேராற்றலும் பேரருளும் உடையவர்.

8. கடவுள் இருக்கும் இடம் யாது?

அவர் எங்கும் நிறைந்திருக்கின்றார்; அவர் இல்லாத இடமே இல்லை.

9. அவர் எதைப்போல் நிறைந்திருக்கின்றார்?

வான்என்று சொல்லப்பெறும் வெளிஎல்லாப்பொருள்களிலும், இடங்களிலும் நிறைந்திருப்பது போலவும், எள்ளின்கண் எண்ணெய் உள்ளும் புறம்பும் நிறைந்திருப்பதுபோலவும் நிறைந்திருக்கின்றார்.

10. கடவுளைக் கண்களால் காணமுடியுமா?

கடவுளைத் தோன்றி மறையும் வடிவமுடைய கல், மணல்,இரும்பு முதலிய உலோகப் பொருள்கள்போல் கண்களால் காணமுடியாது.

11. வேறு எப்படிக் காணலாம்?

கடவுள் அருள்நிறைந்த மெய் அன்பர்களுக்கு அவ்வப்பொழுது வெளிப்பட்டருளும் திருவருள் உருவில் காணலாம்.

12. அந்த வகையான திருவுரு எத்தகையதென்று அறிவது எப்படி?

திருவருள் கை வந்த மெய்யடியார்கள் தாங்கள் கண்ட உண்மைகளைத் தீந்தமிழ்த் திருப்பாட்டாக அருளியுள்ளார்கள். அதன்கண் அறியலாம்.

13. அவர்கள் அருளிய திருப்பாட்டுள் சிறந்து விளங்குந் திருஉரு யாது?

"ஆதியானை" உணர்தற்கரியதோர் சோதி. சோதி என்றாலும் ஒளி என்றாலும் ஒன்று.

14. கடவுள் ஏன் ஒளி வடிவத்தில் தோன்றுகின்றார்?
ஒளியே இருளைப்போக்கிப் பொருளைக் காட்டும்.

15. இன்னும் ஒலியால் வரும் நன்மை யாது?

வேண்டிய அளவுக்கு வெப்பம் தந்து பொருளையும் உடம்பையும் வளர்க்கும்; படிக்க எழுத ஓட ஆடத் தொழில் செய்யத்துணையாகும்.

16. கடவுள் அதனால்தான் ஒலி வடிவில் தோன்றுகின்றாரோ?

ஆம். புறஒளி இருளைப்போக்குவதுபோல அகஒளியாகிய கடவுளும் நம்முடைய அறியாமையாகிய இருளைப் போக்குகின்றார்.

17. கடவுளின் சிறந்த நிலை யாது?

அவருடைய பேரறிவும் பேராற்றலும் பேரருளும் தாமே விளங்குவன. பேரறிவை ஞானமெனவும், பேராற்றலைக் கிரியை எனவும், பேரருளை இச்சை எனவும் கூறுவர். அவர் பிறப்பு இறப்பு அற்றவர். அவருக்கு ஒப்பானவர் யாவரும் இல்லை; அவரே எல்லாருக்கும் மேலானவர்; அவர் என்றும் ஒன்றுபோல் இருப்பவர்; விருப்பு வெறுப்பு அற்றவர்; அவர் எல்லாப்பொருளையும் இயக்குபவர்; எல்லாப்பொருள்களும் நன்றாகத் தொழிலுறும்படி கடவுபவர்: எல்லாவற்றையும் கடந்து நிற்பவர்; முறை (நீதி) தவறாதவர்: பிழை பொறுப்பவர்; எளிதில் அன்பருக்குக் காட்சி அருள்பவர் அவர் ஒருவரே.



18. கடவுளுக்கு இவ்வுண்மைகளை விளக்கும் காரணப் பெயர்கள் உண்டா? உண்டாயின் கூறுக.

கடவுள் அறிவு தானே விளங்குவதால் 'வால் அறிவன்' என்று அழைக்கப்படுவர்; எங்கும் நீக்கம் இன்றி நிறைந்திருப்பதால் 'இறைவன்' என்பர்; எல்லாவற்றையும் இயக்குவதால் 'இயவுள்' என்பர்; எல்லாவற்றையும் கடவுவதால் 'கடவுள்' என்பர்; எல்லார் உள்ளத்தையும் கடந்து நிற்றலாலும் கடவுள் என்பர்.

19. கடவுள் எவ்வாறு முறை செய்கின்றார்?

கடவுள், தம் அருள் பெற்ற திருவள்ளுவநாயனார் போன்ற நீத்தார் வாயிலாக முறைநூலும் மறைநூலும் அருளிச் செய்துள்ளார். அவற்றின்படி நடப்பவர்க்குச் செல்வமும் சிறப்பும் அருளி இன்புறச் செய்வர். நடவாதவர்க்கு அவர், நன்னெறிக் கண் நடத்தற் பொருட்டு வறுமையும் நோயும் அகற்றாது அவற்றுள் அழுத்தித் துன்புறச் செய்வர்.

20. முறை நூலும் மறைநூலும் என்றால் என்ன?

முறை நூல் என்பது உலகியல் ஒழுக்கம் உணர்த்தும் அறநூல். அதுவே வேதம் எனப்படும். மறைநூல் என்பது கடவுள் உண்மை. உயிர் உண்மை, தளை உண்மை, கடவுள் வழிபாடு, கடவுட்பேறு, தளைநீக்கம் முதலிய உணர்த்தும் மந்திரங்கள் நிரம்பிய அறிவு நூல். அதுவே ஆகமம் எனப்படும்.

21. கடவுள் ஒளிவடிவம் அன்றி உருவடிவில் வரும் பொழுது எவ்வாறு வருவர்!

அம்மை அப்பராக வருவர்.

சுவாமி ராமதாஸ் அருளுரைகள் (40)

## நிந்தித்தவனையும் நியாயமாக நடத்து

தமிழ் வடிவம்:- ம. சி. சிதம்பரப்பிள்ளை

புத்த பகவான் நிர்வாண நிலை யெய்திய காரணத்தால், நல்லவன், பொல்லாதவன் என்ற பேத மில்லாது யாவரையும் ஒரே தன்மைத் தாய் அன்பும் கருணையும் கொண்டு நடாத்தும் முறையினால் உலகத்துக்கு அவர் ஒரு உயர்ந்த உதாரண புருஷனாகத் திகழுகின்றார்.

தர்மத்தைப் போதனை செய்வதற்காக ஒரு கிராமத்துக்குச் சென்றார். அக்கிராமவாசிகளுள் ஒருவனுக்கு இவருடைய போதனையில் நாட்ட மில்லாதிருந்தது. புத்த பகவானை அண்டிக் கேலி செய்து தூஷித்து விட்டான். புத்த பகவான் புன் சிரிப்புச் செய்து அவன் மீது இரக்கம் காட்டினார். தமக்கே உரிய சாந்த நிலையில் அவனைப் பார்த்து "சிநேகித! உனது தூஷணையும் ஏச்சும் கேலியும் என்னை ஒரு விதத்திலும் பாதிக்காது. உதாரணத்துக்கு நீர் ஒரு பழுத்த கனியை ஒருவருக்குக் கொடுக்கின்றீர். அதனை உம்மிடம் இருந்து பெறுவதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றார். அப்போது அப்பழம் எவரிடம் போகும்?" என்று கேட்டார். "ஓ! இது இலேசான கேள்வி! அப்பழம் என்னிடமே இருக்கும். என்றான் கிராமவாசி. "சிநேகித!" புத்த பகவான் கூறினார், "என்னை வாயாரத் திட்டினீரே! வைதீரே! அவைகளை நான் ஏற்கவில்லை" என்றார்.

கிராமவாசி உண்மை தெளிந்தான். புத்தபகவானின் புனித பாதமலரில் வீழ்ந்து மன்னிப்புக்கேட்டான். ஒருவரின் இதயத்தில் இரக்கம், பிழை பொறுத்தல் சாந்தம் முதலியன இருக்கின்றனவோ அவரிடம் இறைவன் உறைகின்றான்.



## நெறியும் நெருஞ்சிலும்

கா. கு. சண்முகம்

நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்"
—திருமந்திரம்

நெறி என்பது நன்னெறி, வீட்டு நெறி என இங்குப் பொருள்படுகிறது "முத்திநெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனை" என்றார் மாணிக்கவாசகர்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்.

என நெறியை விளக்குகிறார் வள்ளுவர் முதல் அதிகாரத்திலேயே.

'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி.'

என மீண்டும் விளக்கம் தருகிறார் 356ம் குறளில். எனவே நெறி என்றது, முத்தி அடைய முயலும் வழி என்பது தெளிவாகிறது.

பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்.

என்றார் இராமலிங்கர். 'நீங்குவன தீங்குநெறி நெருங்குவன பெருங்குடிகள்' என்றார் சேக்கிழார், தீயநெறிகளைக் கைவிட்டு நன்னெறியில் நடந்ததால், மக்கள் பெருங்குடிகளாகத் திகழ்ந்தார்கள் எனப் பொருள் கொள்ளலாம்.

சிறுநெறிகளை என் உள்ளம் விரும்பினாலும், இறைவன் அருள் நெறியையே போதித்தான்

எனக் கூறுகிறார் மணிவாசகர்.

"நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனை
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்"
"ஆதி யானை, அமரர் தொழப்படும்
நீதி யானை நியமநெறிகளை ஓதியானை"

என்கிறார் அப்பர் இறைவனை. இறைவனே நியம நெறிகளாகிய சட்ட திட்டங்களைப் படைத்தவன் என்று பொருளாகிறது. அறநெறி அழியாமல் காக்கவே இராமன் உலகில் பிறந்தான் என்கிறார் கம்பர்.

'அறைகழல் இராமன் ஆகி
அறநெறி நிறுத்த வந்தது"
என்ற சொற்றொடர்களால் உணர்க.

இதுகாறும் கூறியவற்றால், நெறி என்பது என்ன என்றும், அதைப் படைத்தது இறைவனே என்பதையும் அறிந்தோம். இனி "நெருஞ்சில் படைத்தான்" என்று ஏன் திருமூலர் கூறினார் எனப் பார்ப்போம்.

காதல் பாதை கரடு முரடானதென்பர். அதிலே முட்களும், முட்டுக்கட்டைகளும், முட்டாள்களின் இடையூறும் இல்லாமல் இல்லை. அது போலவே, முத்திநெறியாகிய உயர்வற உயர்ந்த நெறியிலும் நெருஞ்சில் முற்கள் ஏராளம். அவை கால்களில் ஏறத்தான் செய்யும். கவனித்து நாம் நடந்து செல்ல வேண்டும்.

உந்து வண்டிகளை ஓட்டுவோர் எவ்வாறு மிகக்கவனமாகச் செலுத்துகின்றனரோ, அதுபோலவே மேலாம் நெறியில் செல்வோரும் மிகக்கவனமாகவே சென்றிட வேண்டும். உந்துவண்டி ஓட்டுவோன் ஏமாறின் தன் உயிருக்கு ஆபத்து வரும் அல்லது பிற உயிருக்குச் சேதம் விளைவித்தாலும், சிறையில் சில நாள் இருந்தாக வேண்டும். உந்துவண்டியை ஓட்டுவோர் சிலசமயம் பக்கத்தில் உள்ளோரிடம் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் ஓட்டுவதுண்டு. ஆனால் கண்கள் சாலையிலேயே இருக்கும்.



அதுபோல் நெறிநிற்போர், ஆடாத ஆரியக் கூத்தாடினும் காரியமாகிய இலட்சியத்தில் கண்ணை இருக்கவேண்டும். இல்லையேல் இலட்சியமும் கைகூடாது, துன்பங்களைச் சந்திக்கவும் நேரும். ஆகவே திருமூலர் கூறுகிறார்.

நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவில் நெருஞ்சில்முள் பாயும்

அடுத்த இருவரிகள்:-

"நெறியில் வழுவாது இயங்கவல்லார்க்கு
நெறியில் நெருஞ்சில்முள் பாயகிலாவே"

நெறியில் வழுவாது என்றால் காமம், கோபம், குரோதம், மோகம், மதம், மாச்சர்யம் ஆகிய அறுவகைக் குற்றங்களின் வழிச்செல்லாது அவற்றை நீக்கி ஒழுகுவதாகும். அப்படி ஒழுகினால் துன்பம் அணுகாது. இலட்சியமும் கைகூட இன்பநிலை இயல்பாக வந்துசேரும்

பால், அமுதம், தேன் போன்று தித்திக்கும் சிவபெருமான் திருவடிகளை ஞாலத்தில் உள்ள மக்கள் எந்நெறியில் வழிபடுகிறார்களோ அவ்வழியில் நாமும் வழிபடுவோம் என்கிறார் மணிவாசகர், திருவாசகத்தில்.

"பாலும் அமுதமும் தேனுடனும் பராபரமாய்க்
கோலம் குளிர்ந்துள்ளம் கொண்டபிரான்குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ."

தன்னுடைய செயலின் மூலம் ஒரு இனத்திற்கு தேவையற்ற சாதாரணத் துன்பம் வராத அளவிற்கு நாம் நமது பாதையை வகுத்துக்கொள்ள வேண்டும். நேர்மையும், நற்குணமுமே கடவுளை அடைய நேரான அரச பாதையாகும்.

— பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா

# பெருமான் புகழ் பாடு

சைவப் புலவர், சங்கீத பூஷணம்
அ. கி. ஏரம்பமூர்த்தி

வேலன் திருவடியை விரும்பித் தொழுவார்க்குச்
சீலம் சேர்வாழ்வு வந்தெய்தும் — காலமெலாம்
இன்பம் பெருகிநிற்கும் இன்னலெலாம் தானகலும்
அன்னமே நீயுணரு வாய்

அருணகிரிக் கருள்செய் ஆறுமுக னைத்தொழவே
தருணமிது தாமதமே செய்யாதே — அரியநாள்
வீணாக்கிப் போக்காதே விரைந்து வழிபடுவாய்
தேனான சொல்லிதனைக் கேள்

மயிலி லமர்ந்துவரும் குமரன் மனங்கொண்டு
அயிலைக் கரங்கொண்டு அருள்வனே —பயமுனக்கேன்
தினமு மவன்நாம தோத்திரந்தான் செய்திடுவாய்
உனதுவினை யகலுமே காண்

காணும் பொருள்கூடி ஏதுமே வாராது
பேணும் குகனன்பு என்றென்றும் — வீணின்றி
காணுமவாழ் வோடுபின்பும் கூடிவரும் காப்பாகப்
பூணும் கவசமாம் கொள்

காரெருமை தனிலே காலன் வரும்போது
ஊரவரின் துணைதான் உதவுமோ — சூரனைத்தான்
கூறுசெய்த வேலோன் துணையுண்டு எந்நாளும்
பாரினி லவன்புகழே பாடு

ஆறுபடை வீடுகொண்ட ஆறுமுகன் நாமம்
வீறுகொண்டு நின்று வினையறுக்கும்— ஆறுதல்கொள்
பேதாய் கலங்காதே பெருமான் புகழ்பாடு
பாதமதை நீசேரு வாய்



# கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியனாகும் இறைவன்!

க. குருநாதன்-கேகாலை

பொய், புறங்கூறல், வஞ்சனை, பொறாமை முதலாம் தீயகுணங்கள் மானிட வாழ்வின் முன்னேற்றத்திற்கு இடையூறு விளைவிப்பன. இப்பூதலத்தின்கண் செம்மை சான்ற வாழ்வு வாழாமலும் மறுமைக்கு நற்கதியில்லாமலும் அல்லலுற அவை காரணிகளாக அமைகின்றன. 'வஞ்ச மனம் உடைத்தானின் செயல்களைக்கண்டு பூதங்களனைத்தும் அகத்தே நகும்' என வள்ளுவப் பெருந்தகை திருக்குறளில் கூறியிருக்கிறார். ஆதலினால் சத்தியம், அஹிம்சை, நேர்மை, நாணயம், வாய்மை முதலாம் நற்குணங்கள் கடைப்பிடிக்க வேண்டிய தொன்றாகும். சில வேளைகளில் இவை கைக்கொள்ளப்படுவதற்கு சிரமமான காரியமாகத் தோன்றலாம். ஆயினும் நெறி பிறழா தருமமானது எக்காலத்திலும் வெல்லும் தகைமை வாய்ந்தது. ஒருவனுக்குச் சிக்கலான சமயங்களில் கை கொடுத்துதவக் கூடியதாகவும் இருக்கும். உண்மைக்கு அழிவில்லை என்பதை வடமொழியில் ''சத்தியமேவ ஜெயதே' எனும் சொற்றொடரினால் விளக்குவர்.

எக்காலத்திலும் நன்மைக்கும் தீமைக்கும் ஒரு போராட்டம் நிகழ்கின்றது, புற உலகிலும் சரி உள்ளத்திலேயும் சரி இத்தகைய சம்பவம் காணக்கூடியதாக இருக்கின்றது. கீதை மகா பாரதம் ஆகியவற்றில் இதற்கான சான்றுகளைக் காணலாம். சூழ்ச்சி, வஞ்சகம், கெட்ட மனப்பான்மை கொண்ட சகுனி துரியோதனாதியோரை மகா பாரதத்திலும், கம்சன், சிசுபாலன் ஆகியோரை கிருஷ்ண சரிதத்திலேயும் யுகங்கள் பல கழிந்த பின்னரும்

கண்டுகொண்டே இருக்கின்றோம். வேறு இதிகாசங்கள் புராணங்களிலும் இத்தகைய தீவினை புரிபவர்களினால் அல்லலுற்றவர்களையும் அந்நிலைக்கு நல்லோர் என கருதப்படுபவர்களின் தவக்குறைவே (நல்வினை) காரணமெனவும் பரமபதியின் அருளினாலும் சங்கற்பத்தினாலும் இன்னலினின்று மீள முடியுமெனும் உண்மையையும் உள்ளீடாகக் காணமுடிகிறது.

ஆதலினால் எம்மை எதிர் நோக்கும் சிக்கலான பிரச்சனைகளுக்கு நன்நெறியில் நின்று எம்பெருமானை இறைஞ்சி நிற்பின் அக்கருணாமூர்த்தி எத்தகைய இக்கட்டினின்றும் விடுவித்தருளுவார் எனவும் பூரண விசுவாசம் கொள்ள வேண்டும் என உணரலாம். கருணைக்கடலாம் அவ்வள்ளல் உள்ளொன்று வைத்து புறம்பொன்று கூறி நடப்பவர்க்கு எளிதில் வசப்படக்கூடியவரல்லர், அடையப்படக் கூடியவரல்லர் என்பதைப் பின்வரும் இரு வேறு பாடல்களினால் அறிந்து தெரியலாம். அவை முறையே அப்பர் சுவாமிகளினாலும் அருணைமுனிவரினாலும் பாடப் பெற்றவையாகும். முதலாம் பாடலில் சிவபிரான் எங்ஙனம் வஞ்சகர்க்குத் தம்மையே கரந்து கொள்கின்றார் என்பதையும் அந்தப் பெருமானை மனத்தகத்தே சிக்கெனப் பிணித்துக் கொள்ளும் பான்மையையும் எமக்கெடுத்தியம்புகின்றார்.

'கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே'

எனத் திருநாவுக்கரசுநாயனார் தேவாரப்பாசுரம் பாடியருளியிருக்கிறார். அங்ஙனமே பின்வரும் அநுபூதிப்பாடலின் சாராம்சமும் காணப்படுகிறது.

'கரவாகிய கல்வியுளார் கடைசென்று
இரவாவகை மெய்ப்பொருள் ஈகுவையோ
குரவா குமரா குலிசாயுத குஞ்
சரவா சிவயோக தயாபரனே

என்கிறது கந்தரநுபூதி.



அருணகிரிநாதர் மெய்ப்பொருள் அறிவையும் அநுபவத்தையும் முருகப்பிரானிடம் வேண்டி நிற்கின்றார். அவர் இறைஞ்சி வேண்டும் கல்வி உலகியற் பேற்றிற்கான கல்வியல்ல என்பது ''மெய்ப்பொருள் ஈகுவையோ'' எனப்படும் சொற்றொடர் தெளிவு படுத்தி நிற்கிறது. இரு பாடல்களும் எச்சந்தர்ப்பத்திலும் தீவினை கைக்கொள்ளப்படக் கூடாதெனவே வலியுறுத்துகின்றன. இதற்கு அங்கையில் அனலேந்தி இரவாடும் சிவபெருமானையும், சிவயோக தயாபரனுமான முருகக்கடவுளையும் எம்மனத்தகத்தே தீய எண்ணங்கள் எழாவண்ணமும், அதன் பலனாக தீய செயல்கள் நிகழாவண்ணமும் காத்தருள இறைஞ்சி வேண்டுவோமாக!

நீ நித்தியத்துவம் பெற, 'நான்' என்ற உணர்ச்சியை மனத்திலிருந்து களைந்து எறிந்து, உன் அகந்தையை சிலுவையில்மடியவை. வெறுப்புற்ற உணர்ச்சிகளைத்தெய்வீகத் தீயிலிட்டு, மேன்மை தாங்கி, உயர்ந்து, தெய்வீகத்தோடு வெளி எழு. பிறையை விட்டு அகலாமல் நிற்கும் நக்ஷத்திரத்தைப் போன்று நிலையான நம்பிக்கையில் ஊன்றி நில். காரணமும், காரியத்தினால் விளையும் விளைவுகளும், கதியும் சகடம் போன்றவை என்பதை நினைவில் வை. அவையனைத்தையும் தர்மசக்கரம் குறை தீர்க்குமென்று நினைந்திரு. இப் பிரபஞ்சத்தின் இதயத்திலும், உன் இதயத்திலும், ஆழ்ந்தொலிக்கும் ஆதியான பிரணவ ஒலியை உற்றுக் கேள். ஏனைய சமயக் கோட்பாடுகள், அன்பு, தூய்மை, தியாகம், தர்மம் எனப்படும் பண்பாடுகளே. அவை ஒரே வடிவமான சத்தியத்தின் பல சாயல்கள். அவை அனைத்தும் இறைவன் மகிமையையே போற்றுகின்றன!

—ஸ்ரீபகவான் சத்தியசாயிபாபா

# இந்துமத வினாவிடை

நாகர் கோயில் கே. ஆறுமுகநாவலர்

## முருகன்

106. முருகன் என்ற பதத்தின் பொருள் யாது.

முருகன் என்பதற்கு முருகினையுடையவன் என்பது பொருள். முருகு என்பதற்கு அழகு, இளமை, மணம், தேன், கடவுட்டன்மை என்பன பொருள்களாம். ஆகவே முருகன் என்ற பதம் என்றும் அழியாத அழகினை உடையவன் என்றும் என்றும் மாறாத இளமையினை உடையவன் என்றும் என்றும் நீங்காத நறுமணத்தினை யுடையவன் என்றும் தேன் போன்று இனிக்கின்றவன் என்றும் பரிபூரண கடவுட்டன்மை நிறைந்துள்ளவன் என்றும் பொருள் படுகின்றது. நம்முடைய அழகு இளமை முதலியனவோ என்றும் நிலைபெற்று நிற்பவை அல்ல. ஆனால் முருகன்றன் அழகு இளமை முதலியனவோ என்றும் நிலைபெற்றுநிற்பன.

107. முருகன் பரமசிவனுக்கு இடைக்காலத்திற் பிறந்த மகன்தானே? அவன் முழுமுதற் கடவுள் ஆவானா?

இக்கேள்விக்கு முருகனது திருவவதாரத்தைக் கூறும் கந்தபுராணமே தக்க விடை கூறுகின்றது. சூரபதுமன் முதலிய அசுரர்களின் கொடுமைகளைப் பொறுக்க முடியாத தேவர்கள் சிவபிரானிடம் சென்று,

**"ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்புமின்றி
வேதமும் கடந்து நின்ற விமல! ஓர்குமரன் தன்னை
நீ தரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க"**

என்றார்.

இப்பாட்டினை உற்றுநோக்குவோம். முழுமுதற் கடவுளின் இலக்கணங்களையெல்லாம் தேவர்களே எடுத்துக்கூறி, ஆதியற்ற குமரனை நின்பால் நீயே தரல் வேண்டும் என்கின்றனர். ஆகையால் தேவர்களுக்கும் சிவபெருமானே ஒரு குமரனாய்த் தோன்ற வேண்டும் என்ற



யாழ்/டிறிபேக் கல்லூரி
சாவகச்சேரி

கருத்து இருந்ததாகத் தெரிகிறது. சிவபெருமானே ஆறு முகங்களைக்கொண்டு ஆறு நெற்றிக் கண்களிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் தோற்றுவிக்க அந்த ஆறும் சரவணம் சேர்ந்து அறுமுக ஒருவனாக திரு அவதாரமாயினர் என்றே நாம் அறிகின்றோம். இவற்றிலிருந்து ஈசனே அறுமுகனாகத் தோன்றினான் என்பது வெளிப்படும். இக்கருத்தை வலியுறுத்தவே கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்,

**"ஈசனே அவனாடலால் மதலையாகினன் காண்
பேசில் ஆங்கவன் பரனொடு பேதகன் அல்லன்"**

என்று கூறியுள்ளார்.

**"செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்"**

கந்தரனுபூதி

என்பதிலிருந்தும் முருகன் இடைக்காலத்தில் தோன்றியவனல்லன் என்பதும் முழுமுதற் கடவுளே முருகனாகத் தோன்றினான் என்பதும் விளங்கிடும்.

108. முருகனது திருவுருவத்தின் அமைப்பு யாது?

ஆறுமுகங்கள் பன்னிரண்டு கரங்கள் அழகிய வடிவேல் இவற்றைக்கொண்டு வள்ளி தெய்வானை என இரு சக்திகள் சமேதரராக விளங்குவதே முருகனது உருவத் தோற்ற அமைப்பாம்.

109. முருகன் ஆறுமுகம் கொண்டதேன்?

பரமேஸ்வரனுக்குள்ள ஐந்துமுகத்தோடு அதோ முகத்தினையும் கொண்டு முருகன் அறுமுகனானான். சிவத்துக்குரிய ஐந்து முகத்தினையும் சக்திக்குரிய ஒரு முகத்தினையும் கொண்டு அறுமுகனாயினன் எனவும் நான்கு திசைகளையும் மேல் கீழிடங்களையும் நோக்கி அனைத்தையும் பரிபாலனஞ் செய்ய இறைவன் அறுமுகனாயினான் எனவுங் கூறுப.

110. இவர்தம் ஆறுமுகங்களுள் ஒவ்வொன்றும் செய்யும் தொழில்கள் யாவை?

"மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒரு முகம்,
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத்தன்றே; ஒருமுகம்
மந்திரவிதியின் மரபுளி வழா அது
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசை விளங்கும்மே; ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே; ஒருமுகம்;
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே.

— திருமுருகாற்றுப்படை

(அ) ஒருமுகமானது பெருமையாகிய இருளையுடைய உலகம் குற்றமில்லாமல் விளங்கும் பொருட்டுப் பல கிரணங்களையும் தோற்றுவித்தது.

(ஆ) ஒருமுகமானது அன்பர்கள் துதித்தால் அவர்கள் குற்றங்களை நீக்குவதற்கு உடன்பட்டு அவர்களுக்கு இனிதாய் நடந்து அவர்கள் மேற்சென்ற விருப்பத்தினாலே மகிழ்ந்து அவர்கள் வேண்டும் வரங்களைக்கொடுத்தது.

(இ) ஒருமுகமானது மந்திரத்தையுடைய வேதத்திற் சொல்லிய முறைமை தவறாத பிராமணர்களுடைய யாகங்களிலே தீங்குவராதபடி நினையா நிற்கும்.

(ஈ) ஒருமுகமானது வேதாகமங்களிலே மறைந்து கிடக்கும் பொருள்களை இருடிகள் இன்பம் பொருந்தும் படி ஆராய்ந்து போதித்துச் சந்திரனைப்போலத் திசைகளெல்லாவற்றையும் விளக்கும்

(உ) ஒருமுகமானது திருவுள்ளத்திலே நிகழாநின்ற சமத்துவத்தை ஒழித்துக் கோபங்கொண்ட திருவுள்ளத்துடனே பகைவராகிய அசுரர்களை வதைத்துப்போர்க்கள வேள்வியை வேட்டது.



(ஊ) ஒருமுகமானது வேடருடைய மடப்பத்தையுடைய மகளும் கொடிபோலும் இடையினையுடைய இளம் பெண்ணுமாகிய வள்ளிநாயகியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று.

இவ்வாறு அறு முகங்களும் அவ்வம் முகங்களுக்கேற்ப ஒவ்வோர் தொழிலினைக் கொண்டு விளங்கும்.

111. பன்னிரு கரங்கள் செய்யும் தொழில்கள் யாவை?

ஒருகை தேவர்களையும் ரிஷிகளையும் பாதுகாக்க அமைந்தது. அதற்கிணையான ஒருகை மருங்கிலே கிடந்தது. மூன்றாவது கை அங்குசத்தை செலுத்துகின்றது. அதற்கிணையான கை ஆடை உடுத்தியதொடையிற் கிடக்கிறது. ஐந்தாவதும் ஆறாவதுமாகிய கைகள் அழகிய பெரிய பரிசையோடு வேலாயுதத்தை வலமாகச்சுழற்றுகின்றன. ஏழாவது கை முனிவர்களுக்கு உரையிறந்த பொருளை உணர்த்த மார்போடு சேர்ந்து விளங்க, எட்டாவது கை மார்பில் தாழ்ந்து தொங்கும் மாலையுடனே சேர்ந்து விளங்குகிறது. ஒன்பதாவது கை வளைகளுடனே மேலே சுழன்று களவேள்வியைவேட்கும் முத்திரை கொடுக்கின்றது. இதற்கிணையான கை மணியை மாறி ஒலிக்கப் பண்ணுகின்றது. பதினொன்றாவது கை மழையைப்பெய்விக்கின்றது. அதற்கிணையானமற்றொருகை தெய்வப் பெண்களுக்குமணமாலை சூட்டுகின்றது.

112. வள்ளி தெய்வானை வடிவேல் இவை எவற்றை உணர்த்துகின்றன.

இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்பவற்றை உணர்த்துகின்றன.

---

இந்தத் தேகம் எனக்கு ஒரு விளக்கு; என் உயிரே இந்த ஒளிக்கான திரி; என் இரத்தமே எண்ணெய்; இவையனைத்தையும் இறைவனைக் காண்பதற்காகவே நான் உபயோகிக்கின்றேன்.

— கபீர்தாஸ்

# குருநாதர் திருவடியில்

ஏ. சொக்கலிங்கம்

இத்தகுதிகளில் முதலாவது பகுத்தறிவு; இதனை முத்திநெறியில் மக்களைச் சேர்ப்பிக்கும் நித்த அநித்தங்களைப் பகுத்தறியும் விவேகம் என்றுகொள்வது வழக்கம். இது சரியே; என்றாலும், இதற்கு இதைவிட விரிந்த பொருளுமுண்டு. அது முத்திமார்க்கத்தின் தொடக்கத்தில் மட்டுமின்றி அதன் முடிவுவரையிலும் ஒவ்வொரு நாளும் அதன் ஒவ்வொருபடியிலும் நடைமுறையில் கொள்ளவேண்டியதொன்று. அம்மார்க்கத்தில் மட்டிலுமே அடையத்தக்க பொருள்கள் காணக்கிடைக்கின்றனவென்று நீ அறிந்திருக்கின்றாய். அதனாலே முத்திமார்க்கத்தில் புகுகின்றாய். அறியாத மக்கள் செல்வமும் செல்வாக்கும் தேட உழைக்கின்றனர். ஆனால் இப்பொருள்களோ, கூடினால் ஒரு பிறப்பிற்கு மாத்திரம் நிலைத்திருப்பன. அதனால் அநித்தப்பொருள்களாகும். இவற்றினும் மேலான பொருள்களும் இருக்கின்றன. மெய்யாயும் நித்தமாயும் உள்ள பொருள்கள் அவை; இவற்றை ஒருக்கால் காண்பாயாகில் மற்றவற்றை நீ ஒருக்காலும் விரும்பாய்.

உலகம் முழுவதிலும் இருவகை மக்களே உளர். அறிந்தவர்களும் அறியாதவர்களும்; இந்த அறிவுதான் முக்கியமான காரியம். ஒருவன் எம்மதத்தவன், எக்குலத்தவன் என்பன போன்ற காரியங்கள் முக்கியமானவையல்ல. உண்மையாகவே முக்கியமாயுள்ளது யாதெனில், இறைவன் மனிதருக்கு வகுத்திருக்கும் திட்டத்தைப் பற்றிய அறிவேயாம். ஏனெனில் இறைவன் ஒரு திட்டத்தையுடையவர், அத்திட்டம் விகாசமுறை எனப்படும். எவனொருவன்அதை ஒரு முறைகண்டு, அதனை உண்மையில் உணர்கின்றானோ, அவன் அதற்காகப் பாடுபடாமலும் அதோடு ஒன்றி நிற்காமலும் இருக்கமுடியாது. ஏனெனில் அது



யா/டிறிபேக் கல்லூரி

அத்துணை மகிமையும் அழகும் உடையது. ஆகவே அவன் உண்மையை அறிகின்ற காரணத்தால், கடவுள் பக்கம் சார்ந்தவனாகின்றான்; நன்மைக்கென முன்னின்று தீமையை எதிர்க்கின்றான், தன்னலந் தவிர்த்து விகாசமுறைக்கு இணங்க உழைக்கின்றான்.

அவன் கடவுள் பக்கஞ் சார்ந்தவனாயின் அவன் நம்முள் ஒருவனாவான் எனவே அவன் தன்னை இந்துவென்றோ, பௌத்தனென்றோ, கிருஸ்தவனென்றோ, முகம்மதியனென்றோ கூறிக்கொண்டாலும் சரி அன்றியும் இந்தியனாகவோ, ஆங்கிலேயனாகவோ, சீனனாகவோ, ருஷியனாகவோ இருந்தாலும்சரி, ஈதெல்லாம் ஒரு பொருட்டாகா. கடவுள் பக்கத்தினர், தாம் இங்கிருப்பது ஏனென்றும், தாம் செய்ய வேண்டுவது இன்னதென்றும் அறிகின்றார்கள்; அதனைச் செய்ய முயன்று வருகின்றார்கள்; மற்றவர் யாவரும் தாம் செய்ய வேண்டுவது இன்னதென்று இன்னமும் அறியாதவராய், அக்காரணத்தால் அடிக்கடி மூடத்தனமாய் நடக்கிறார்கள். தமக்கெனத் தனிமுறைகள் கண்டுபிடிக்க முயல்கின்றார்கள். அவை தமக்கு இன்பந்தருமென்று எண்ணுகிறார்கள். அனைவரும் ஒன்றே என்பதையும், அதனால் அந்த ஏகபரம்பொருள் சங்கற்பிப்பதே என்றைக்கும் எவருக்கும் மெய்யாகவே இன்பந்தரவல்லதென்பதையும் அவர்கள் அறிகின்றனர். அவர்கள் நித்தியத்தை விட்டு அநித்தியத்தைப் பின்பற்றுகிறார்கள் இவ்விரண்டின் வேறுபாட்டைத் தெரிந்துகொள்ளாதவரை, அவர்கள் கடவுள் பக்கம் சார்ந்தவராகார், ஆதலால் இவ்விவேகமே முதற்படியாகும்.

ஆனால், நீ கடவுள் பக்கஞ் சாரத் தீர்மானித்த பிறகும், நித்தியஅநித்தியங்களிலும்பலவிதங்களிருப்பதைத் தெரிந்துகொள்ளல் வேண்டும், அதாவது சரி தப்புகட்கும்முக்கியமானவை முக்கியமற்றவை கட்கும் பலனுள்ளவை பலனற்றவைகட்கும், மெய் பொய்கட்கும், தன்னலம் பரநலங்கட்கும், உள்ள வேறுபாடுகளையும் பின்னும் ஆராய வேண்டும்.

சரி தப்பு இவற்றுள் எதைத் தெரிந்தெடுக்கவேண்டும் என்பதை அறிவதில் கஷ்டமிருக்கக்கூடாது. ஏனெனில் குருநாதரைப் பின்பற்ற விரும்புவோர், எவ்வளவு இன்னல்கள் வந்தாலும் நேர்வழியைப் பின்பற்றுவதாக முன்னரே நிச்சயித்திருப்பவராவர். ஆனால் உடல்வேறு ஆன்மாவேறு. ஆன்மாவின் விருப்பம் உடலினது விருப்பத்தோடு எப்போதும் ஒன்றுபடுவதில்லை. உன்னுடைய உடம்பு ஒன்றை விரும்பும்போது, அதை உண்மையில் நீயே விரும்புகிறாயா என்று கூர்ந்தெண்ணிப்பார். ஏனெனில் நீயோ கடவுள் சங்கற்பிப்பதையே நீயும் சங்கற்பிக்கின்றனை; ஆனால் உன்னுள்ளே மறைந்திருக்கும் கடவுளைக் காணுதற்கும், உன்குரலேயாகும் - அவர்குரலைக் கேட்பதற்கும், உன் நெஞ்சிற்குள்ளே ஆழ்ந்து சிந்தனை செய்தல் வேண்டும். பூத உடம்பாயினும், இச்சையுடம்பாயினும், மன உடம்பாயினும் சரி, அந்த உனதுடம்புகளை நீயென்று தவறாகக்கொள்ளாதே. அவற்றுளொவ்வொன்றும் தான் வேண்டுவதைப் பெறும் பொருட்டுத் தானே ஆன்மாவென நடிக்கும். ஆனால் நீ அவற்றையெல்லாம் அறியவேண்டும், உன்னை அவன்றின் எஜமானனாகவும் உணரவேண்டும்.

செய்தாக வேண்டிய வேலையிருக்கும் போது, பூத உடம்பானது ஓய்வெடுக்க விரும்புகிறது. உலாவச் செல்லவும், உண்ணவும் பருகவும் விரும்புகிறது; தன்னை அறியாத மனிதன், ''நான் இவற்றைசெய்ய விரும்புகிறேன். கட்டாயம் செய்தல் வேண்டும்'' என்று சொல்லிக்கொள்கிறான். ஆனால் அறிந்தவனோ, ''இவற்றை விரும்புவது நானல்ல, அது சற்றுக் காத்திருக்கட்டும்.'' என்று கூறிவிடுகிறான். யாருக்காவது உதவிச் செய்யச் சமயம் வாய்க்கும் போது, அடிக்கடி உடம்பானது, ''இது நமக்குப் பெருந்தொந்திரவாகும், வேறு யாராவது இதைச் செய்யட்டும்,'' என்று எண்ணுகிறது. ஆனால் மனிதனோ, ''இதஞ்செய்வதில் என்னைத் தடுக்காதே'' என்று உடம்பிற்குப் பதிலிறுத்துவிடுகின்றான்.



உடம்பு உனக்குரிய பிராணி - நீ ஏறிச் செல்லும் குதிரை, அதனால் நீ அதைச் செம்மையாய் நடத்தவும், நன்கு பேணவும் வேண்டும்; அதனை மட்டுக்கு மிஞ்சி வேலை வாங்குதல் கூடாது, தூய உணவும் நீரும் முறைப்படி அதற்கு ஊட்டி, அணுவளவு கூட அழுக்கில்லாது, அதனை எப்போதும் மிகச் சுத்தமாய் வைத்திருத்தல் வேண்டும். ஏனெனில் முற்றிலும் சுத்தமும் ஆரோக்கியமும் உள்ள சரீரமின்றி, சாதனத்திற்குரிய கடினமான வேலையை உன்னால் செய்தல் இயலாது. அதனால் ஏற்படும் ஓயாத அலுப்பைச் சகிக்கவும் முடியாது. ஆனால் எப்போதும் உடம்பை நீ அடக்கியாள வேண்டுமேயன்றி, அது உன்னை ஆளுதல் கூடாது.

இச்சையுடம்பிற்கும் அதற்குரிய ஆசைகள் உண்டு— அவையும் பலப்பல. நீகோபங் கொள்ளவும், கடுஞ்சொற் சொல்லவும், அழுக்காறடையவும், பணத்திற்குப் பேராசை கொள்ளவும், பிறருடைமை கண்டு பொறாமைப்படவும், மனத்தளர்ச்சிக்கிடங்கொடுக்கவும், அது தூண்டுகிறது. இவை மட்டுமல்ல, இன்னும் பலவும் அது விரும்புகின்றது. ஆனால் அவ்வாறு செய்வது உனக்குத் தீங்கிழைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடல்ல. உடம்பில் தீவிரமான சலனங்களை அனுபவிக்கவும் அவற்றை அடிக்கடி மாற்றவும் அது விரும்புவதனாலேயாம். இவையொன்றும் உனக்குத்தேவையில்லை, ஆகையால் நீ உன் விருப்பங்களையும் உன் உடம்பின் விருப்பங்களையும் பிரித்தறிதல் வேண்டும்.

உன் மன உடம்போ தன்னைத் தனிபொருளாக எண்ணி இறுமாப்படையவும், தன்னை உயர்த்தியும் பிறரைத் தாழ்த்தியும் மதிக்க விரும்புகின்றது. உலகப் பொருள்களினின்றும் நீ அதைவிலக்கிய பிறகும் அது குருநாதருடைய வேலையையும் பிறருக்குதவி செய்வதையும் கருதுவதை விட்டு, தன்னலத்தைக் கருதி, உனது முன்னேற்றத்தைப் பற்றிய சிந்தனையுள் உன்னை ஆழ்த்த முயல்கின்றது. நீ தியானஞ் செய்யும் பொழுது, நீ விரும்புகின்ற ஒன்றை

மட்டும் விட்டுத் தான் விரும்பும் பல பொருள்களைப் பற்றிச் சிந்திக்க உன்னைத் தூண்டும். நீ இம்மனமல்ல, அது உபயோகத்திற்கென உனக்கு ஏற்பட்டது. ஆதலின் இங்கும் விவேகம் அவசியமாகின்றது. நீ ஓயாது விழித்திருக்க வேண்டும், இல்லையேல் நீ தவறிவிடுவாய்.

குப்தவித்தையானது, சரிதப்புகளினிடையே சமராசி பண்ண இடங்கொடுப்பதில்லை. எவ்வளவு கஷ்டநஷ்டமாகத் தோன்றினாலும் நேர்மையானவற்றை நீ செய்தே தீரவேண்டும். தவறானவற்றைச் செய்யாதொழிதலே வேண்டும். அறிவீனர்கள் அவைபற்றியாது எண்ணினாலும் சொல்லினும்சரி இயற்கையின் மறைவான விதிகளை நீ ஆழ்ந்து கற்றல்வேண்டும். அவற்றை அறிந்தபின், உன்து அறிவையும் சாதாரண யுக்தியையும் எப்போதும் பயன்படுத்தி, அவ்விதிகளுக்குத் தக்கவாறு உன் வாழ்க்கையை ஒழுங்காக அமைத்துக்கொள்.

முக்கியம். முக்கியமற்றது என்பவற்றையும் நீ பகுத்தறிய வேண்டும். குணங்குற்றம் சம்பந்தப்பட்ட வரை பாறைபோல் உறுதியாக நின்று, காரியமல்லாதவற்றில் எப்போதும் பிறருக்கிணங்கி நட. ஏனெனில் நீ உனக்குத் தேவையென நினைக்கும் அதே முழுச் சுதந்தரத்தைப் பிறர்க்கும் விட்டுவைத்து, எப்போதும் சாந்தனாயும், தயாளனாயும், நியாயவானாயும், இணங்கி யொழுகுபவனாயும் இருத்தல் வேண்டும்.

செய்யத்தக்கதின்னதெனத் தெரிந்துகொள்ள முயல்; ஒரு பொருளின் அளவைக்கொண்டு அதனை மதிப்பிடுதல் கூடாதென்று ஞாபகம்வை. உலகோர் நல்லதென்று புகழும் பெருங்காரியத்தைவிட, குருநாதர் வேலைக்கு நேராகப் பயன்படும் சிறு காரியமே செய்தற்குச் சாலச்சிறந்தது. பயனுள்ளன, பயனற்றனவென்பதையும் பகுத்துணர்ந்து, பயனுள்ளவற்றுள்ளும் மிக்க பயனுள்ளவை இவை, குறைந்த பயனுள்ளவை இவையெனப் பாகுபாடு செய்தறிதல் வேண்டும். ஏழைகளுக்கு உணவளிப்பது



ஒரு நல்ல உத்தமமான உபகாரச் செயலே; ஆயினும் அவருடம்பிற்கு உணவூட்டுவதை விட அவருக்கு ஆன்ம உணவளிப்பதே, கூடுதலான மேன்மையும் பலனும் உடையது. செல்வமுடைய எவனும் உடம்புக்கு உணவளிக்கலாகும். ஆனால் அறிவார் மட்டுமே ஆன்ம உணவளிக்க முடியும். நீ அறிவாயாகில், பிறரும் அறிந்துகொள்ள உதவிசெய்வது உன் கடமை.

நீ முன்னரே எவ்வளவு அறிவாளியாயிருப்பினும், இம்மார்க்கத்தில் நீ கற்கவேண்டுவது மிகவுண்டு; அதுவும் மிக அதிகமாயிருப்பதால் இங்கும் விவேகம் வேண்டும் கற்கத் தகுந்தது இன்னதெனவும் நீ கவனமாய் ஆராயவேண்டும். அறிவெல்லாமே உபயோகமுள்ளதாம். ஒருநாள் உனக்கு எல்லா அறிவும் கிட்டும்; ஆனால் உன்னிடம் அரை குறை அறிவே இருக்குமட்டும், அந்த அறிவும் மிக உபகாரமுள்ள அறிவாயிருக்கப்பார். இறைவன் வாலறிவன், அன்புமாவன்; எவ்வளவுக் கதிகமான அறிவு உன்னிடத்துண்டோ அவ்வளவுக் கதிகமாக அவருடைய தன்மைகள் உன்னிடம் விளக்கம் பெறும். அதனால் நீ கற்றறிவாயாக, ஆனால் பிறருக்கு உதவிசெய்ய உனக்குப் பெரிதும் பயன்படும் கல்வியையே முதலிற் கற்பாயாக. கல்வி கற்பதில் பொறுமையுடன் உழை, அது மக்கள் உன்னை அறிவாளியென்று கருதுவதற்கல்ல, நாம் அறிவுடையோமென்ற இன்பம் பெறுதற்குமல்ல, மற்று ஏனெனில், அறிவுடையமனிதனே அறிவார்ந்த உதவி செய்யக்கூடும். உதவி புரிய நீஎவ்வளவு தான் விரும்பினாலும், உனக்கு அறிவில்லாதிருப்பின் நீ நன்மையினும் அதிகமாகத் தீமையே செய்யநேரிடும்.

மெய்ம்மையும் பொய்ம்மையும் நீ பிரித்தறிதல் வேண்டும்; உள்ளம் உரை செயல் எல்லாவற்றிலுமே நீ உண்மையோடிருக்கக் கற்றுக்கொள்.

முதலாவது உள்ளத்திலே—அது எளிதன்று, ஏனெனில் உலகில் அநேக உண்மையற்ற கருத்துக்களும் அநேக மூடக் கொள்கைகளும் இருந்து வருகின்றன. அவற்றிற்கு அடிமைப்பட்டவன் எவனும் முன்னேற்றமடைய முடியாது.

அதனால் ஒரு கருத்தைப் பலர் கொள்வதனாலேயோ, மக்கள் அருள் வாக்கென்று கொள்ளும் நூல்களில் எழுதப்பட்டிருப்பதனாலேயோ நீ கொள்ளலாகாது; அதனைப்பற்றி நீயாகவே ஆராய்ந்து, அது நியாயமானதாவென்று நீயே முடிவு கட்டிக்கொள்ள வேண்டும். ஆயிரம் பேர் ஒரு விஷயத்தைப் பற்றி ஒரே எண்ணங்கொண்டிருந்தாலும், அவ்விஷயத்தைப்பற்றி அவர்கள் ஒன்றும் அறியாராயின், அவர்களது கருத்து மதிப்பற்றதென்பதை நீ அறிவாயாக. முத்தி மார்க்கத்தில் நடக்க விரும்புகின்றவன் எதையும் தனக்குத்தானே ஆராய்ந்தறியக் கற்றுக்கொள்ளல் வேண்டும். ஏனெனில் மூடநம்பிக்கையானது உலகிலுள்ள மிகப் பெருந் தீமைகளில் ஒன்று. அது அறவே உன்னை விடுவித்துக் கொள்ள வேண்டிய விலங்குகளில் ஒன்று.

பிறரைப் பற்றிய உனது எண்ணமும் உண்மையானதாயிருத்தல் வேண்டும்; அவர்களைப் பற்றி நீ அறியாததொன்றையும் நினைத்தலாகாது. அவர்கள் எப்போதும் உன்னைப் பற்றியே நினைத்துக்கொண்டிருப்பதாக நீ எண்ணிக் கொள்ளாதே. உனக்குத் தீங்கு விளைக்குமென்று நீ கருதுமொன்றை ஒருவன் செய்தாலோ, உன்னைச் சாட்டிப் பேசுவதாகத் தோன்றுமொன்றை அவன் சொன்னாலோ, உடனே அவன் எனக்குத் தீங்கு செய்யக் கருதினான், என்று நினைத்துவிடாதே. அநேகமாய் உன்னுடைய நினைப்பே அவனுக்கில்லாமல் இருக்கலாம். ஏனெனில் ஒவ்வொரு உயிருக்கும் தன் தன் கவலைகள் இருக்கவே இருக்கின்றன. அவனுடைய கவலைகள் முக்கியமாய்த் தன்னைப் பற்றியே சுழன்று கொண்டிருக்கும். ஒருவன் உன்னோடு சினந்து பேசினால், ''அவன் என்னை வெறுக்கின்றான். என்னைப் புண்படுத்த விரும்புகின்றான்.'' என்றெண்ணி விடாதே. அநேகமாய் யாரோ ஒருவன், அல்லது யாதோ ஒன்று அவனுக்குக் கோபமூட்டியிருக்கக்கூடும், அவ்வேளை அவன் உன்னைச் சந்திக்க நேரிட்டதனால், தன்கோபத்தை உன்னிடம் தாக்குகிறான். அவன் மூடத்தனமாக இப்படிச் செய்கின்றான். கோபமெல்லாம் மடமையாவதே, ஆனால் அதற்காக நீ அவனைப் பற்றி உண்மைக்கு மாறான வகையிலே எண்ணலாகாது.



நீ குருநாதரின் சிஷ்யனாகும்போது, அவரது நினைவின் பக்கத்தில் உன் நினைவை வைத்து அதன் உண்மையை என்றும் ஆராயலாம். ஏனெனில் சீடன் தன் குருநாதருடன் ஒன்றி நிற்பவன். தன் நினைவு குருநாதர் நினைவோடு பொருந்துகின்றதா என்பதைச் சட்டெனக் காண்பதற்கு அதனைக் குருநாதர் நினைவுக்குள் புகுத்துவதே போதுமானது. அது பொருந்தவில்லையாயின், அது தவறு. சீடன் உடனே தன் நினைவை மாற்றியமைக்கின்றான். ஏனெனில் குருநாதர் எல்லாம் அறிந்தவராதலால் அவரது நினைவு பூரணமானதாம். குருநாதரால் சீடராக இன்னும் ஏற்றுக்கொள்ளப்படாதவருக்கு இதனை முற்றும் செய்தல் இயலாது; ஆனால் அவர்கள், 'குருநாதர் இதைப்பற்றி என்ன நினைப்பார்? இவைபோன்ற சந்தர்ப்பங்களில் குருநாதர் எவ்வாறு பேசுவார், எவ்வாறு செய்வார்?' என்று அடிக்கடி சற்றுநின்று யோசிப்பதால் தமக்குத்தாமே பேருதவி செய்துகொள்ளலாம். குருநாதர் இவ்வாறு செய்வார், சொல்லுவார், நினைப்பார் என்று உன்னாற் கருத இயலாததை நீ ஒருக்காலும் செய்யவோ, சொல்லவோ நினைக்கவோ கூடாது.

நீ பேச்சிலும் வாய்மையுடனிருக்க வேண்டும்-அதாவது, சரியாயும் மிகைப்படுத்தாமலும் பேசவேண்டும். பிறன் பேச்சுக்குஒருபோதும் நோக்கம் கற்பியாதே; அவனுடைய குருநாதரே அவனுடைய எண்ணங்களை அறிவார். உன்மனத்திற்கு ஒருக்காலும் தோன்றியிராத காரணங்கள் அவனது செயலுக்கு இருக்கலாம். எவருக்கேனும் விரோதமான கதையொன்று உன் காதிற்பட்டால், அதை திருப்பிச்சொல்லாதே; அது உண்மையில்லாததாகலாம், உண்மையாயினும் ஒன்றுஞ் சொல்லாதிருத்தலே அன்புடைமையாகும். பிழைக்குள் விழாதவண்ணம் பேசுமுன் தீர யோசி.

செயலிலும் மெய்மையோடிரு; உள்ளொன்று புறமொன்றாக நடிக்காதே. ஏனெனில் வேடங்கள் யாவும் உண்மையின் தூய ஒளிக்கு ஒரு தடயம். மாசற்ற கண்ணாடியின் வழியாகச் சூரியஒளி பிரகாசிப்பதுபோல உண்மையின் ஒளி உன் வழியாகப் பிரகாசிக்கவேண்டும்.

தன்னலம் பரநலம் இரண்டிற்கும் உள்ளவேறு பாட்டையும் நீ உணர வேண்டும். தன்னலம் அநேக வடிவெடுக்கும். ஒரு வடிவில் அதனை அறவே மாய்த்துவிட்டதாக நீ நினைக்கும் போது, அது வேறொரு வடிவத்தில் அதே பலத்தோடு முன்போல் மூளும். ஆனால் பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் படிப்படியாக உன் மனதில் ஊறி நிறையும் போது, உன்னைப்பற்றிய் நினைவுக்கு அங்கே இடமோ நேரமோ இராது போம்.

வேறொரு விதத்திலும் நீ பகுத்தறிய வேண்டும். எவரிடத்தும் எப்பொருளிலும் இறைவன் இருப்பை உணரக் கற்றுக்கொள். வெளித்தோற்றத்தில் அவரோ அதுவோ எவ்வளவு தீயதாகத் தோற்றினுஞ் சரியே, உனக்கும் உன் சகோதரனுக்கு முள்ள பொதுத்தன்மை மூலம் நீ அவனுக்கு உதவக்கூடும். அப்பொதுத்தன்மை இறை இருப்பே; அவ் இறை இருப்பை அவனிடத்து எழுப்பும் வகையை அறிந்துகொள், அதற்கு உன் மன்றாட்டைச் செலுத்தும் விதத்தைத் தெரிந்து கொள்; அவ்விதம் உன் சகோதரனை நீ தவறுகளினின்றும் காப்பாற்றலாகும்.

## மனத்தை அமைதியுறச் செய்வது எப்படி?

(ஸ்ரீ அன்னை)

முதல் நிபந்தனை, பேச்சை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்க வேண்டும்.

இரண்டாவது, அந்த நேரத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறாயோ அதைப்பற்றி மட்டுமே நினைக்கவேண்டும். ஏற்கனவே செய்து விட்டதைப் பற்றியோ இனிச் செய்யவேண்டியதைப் பற்றியோ நினைக்கக்கூடாது.

கடந்து போனதைப் பற்றி வருந்துவதோ வரப் போவதைப் பற்றிக் கற்பனை செய்வதோ கூடாது.

உன்னால் முடிந்தமட்டும் உனது சிந்தனைகளிலிருந்து தோல்வி மனப்பான்மையைத் தவிர்த்து நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கை உடையவனாக உன்னை மாற்று.



# சுசீந்திரம்

ஓம் கோபாலகிருஷ்ணன்

கன்னியாகுமரிக்கு வடக்கே 8 கல் தொலைவில் பன்னெடுங்காலங்களுக்கு முன்பு அத்ரி என்ற முனிவர் தன் மனைவி அனுசூயாவுடன் தவ வாழ்வு வாழ்ந்துவந்தார். அம் முனிவர் வாழ்ந்த இடம் இன்றும் சுசீந்திரம் என்றும் ஞானாரண்யம் என்று வழங்கப்படுகிறது. அனுசூயா தலைசிறந்த கற்புநெறி வாய்ந்தவள். ஒரு சமயம் மழை இல்லாத காரணத்தால் அங்கு கடும் பஞ்சம் தோன்றியது. அத் துன்பத்தைப் போக்குவதற்காக யோகிகள் அத்ரியின் ஆசிரமத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அத்ரி முனிவர் அங்கு இல்லை. உடனே அவரின் தர்ம பத்தினியான அனுசூயா தன் கணவரின் பாத தீர்த்தத்தால் வருண பகவானை தியானித்தார். வருண பகவானின் திருவருளால் மழை பெய்தது. பஞ்சம்பறந்தது. மக்களெல்லாம் மகிழ்ந்தார்கள். அனுசூயாவின் கற்பின் சிறப்பை செவியுற்றார் நாரதர். தேவியரின் கர்வத்தை அடக்கி மும்மூர்த்திகளை ஒரே இடத்தில் தரிசிக்க விரும்பினார். நாரதர் தேவருலகம் சென்று மூன்று தேவியர்களிடத்தும் அனுசூயாவின் கற்பைப்பற்றி வானளாவப்புகழ்ந்தார். பெண்களுக்குப் பொறாமை ஏற்பட்டது. அனுசூயாவின் கற்பை சோதிக்க தேவியர்களின் விருப்பப்படி மும்மூர்த்திகளும் அந்தணர் உருவம் கொண்டு மண்ணுலகம் வந்தனர். அவ்வமயம் அத்ரி முனிவர் இமயமலை சென்றிருந்தார். அந்தணர்கள் அனுசூயாவின் ஆசிரமத்திற்கு வெளியே நின்று உணவு கேட்டனர். அன்னமிட அனுசூயா வெளி வந்தார். ஆடை அணிந்தவரிடம் அன்னம் கொள்வதில்லை என்றனர். சற்று கலங்கிய உத்தமி தன் கணவரது பாத தீர்த்தத்தை எடுத்து அவர்களின் மேல் தெளித்தார்.

அம்மூவரும் குழந்தைகளானுர்கள். மூன்று குழந்தைகளும் ஆசிரமத்தில் வளர்ந்தன. மூன்று தேவியர்களும் தம் கணவன்மாரைத் தேடி அனுசூயாவின் ஆசிரமத்திற்கு வந்தனர்.

அங்கு தம் கணவன்மார்கள் குழந்தைகளாக விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டு வேதனையுற்று மீண்டும் தம் கணவன்மார்களை மீட்டுத் தரும்படி மண்டியிட்டு வேண்டினர். அனுசூயாதேவி கணவரின் பாத தீர்த்தத்தை அவர்களின்மேல் தெளித்து சுய உரு வரச் செய்தார். அவ்வமயம் நாரதர், அத்ரி முனிவர் அனைவரும் வந்தனர். சுசீந்திரம் மூன்று தேவியர்களும் மும்மூர்த்திகளும் தரிசனமளித்த சிறந்த தெய்வ பூமியாகும். இதைப் பற்றி இன்னெரு புராணக்கதையும் உண்டு. ஒரு சமயம் இந்திரன் கௌதம முனிவரின் மனைவியின்மீது தவருன எண்ணம் கொண்டான். அன்று இரவு கோழி உருவம் தாங்கிஅவர் வீட்டினருகே சென்று கூவினுன். கௌதம முனிவர் பொழுது விடிந்துவிட்டது என்று ஆற்றிற்கு நீராடச் சென்றுர். ஆற்றிற்குச் சென்றதும் அதன் நிலையை அறிந்த முனிவர் இது நடுநிசி என்று அறிந்ததும் வீடு திரும்பினுர். வீட்டினருகே இந்திரன் கௌதமமுனிவர் உருவில் நின்றுன். அவன் அருகே அவரது மனைவி அகலிகை இருந்தாள். அகலிகை கல்லாகுமாறும் இந்திரன் உடல் முழுதும் கண்களாகுமாறும் சாபமிட்டார். தன் சாபத்தையறிந்த இந்திரன் சுசீந்திரத்தில் நெடுநாள் தவம் புரிந்தான். அங்கிருந்த மும்மூர்த்திகளும் அவனது தீவினையை விலக்கினுர்கள். இந்திரன் சாபம் நீங்கியதால் ஞாஞரண்யம் அல்லது சுசீந்திரம் எனப்பெயர் பெற்றது. இங்கு தானுமாலயனை அர்த்தஜாமத்தில் இந்திரன் பூஜை செய்வதாக ஒரு செய்தி உண்டு. இது புராணக் கதை.

சுசீந்திரம் கோவில் தென்னகத்தில் தெய்வநிலையிலும் சிற்ப நுணுக்கங்களிலும் சிறப்பு வாய்ந்தது. 134 அடி உயரமுள்ள கோபுரம் சிற்ப எழிலோடு விளங்குகிறது.



சர்வேசுரன் ரிஷப வாகனத்தில் வீற்றிருக்கிறுர். அவரின் இரு பக்கங்களிலும் அன்ன வாகனத்தில் பராசக்தியையும் கருட வாகனத்தில் விஷ்ணுவையும் தரிசிக்கலாம். இக்கோயில் முழுவதும் கருங்கல்லால் ஆனவை.

கோயில் வாயிலைக் கடந்ததும் ஊஞ்சல் மண்டபம் ஒன்றுள்ளது. அங்குள்ள தூண்களில் மன்மதன், ரதி, கர்ணன், அர்ச்சுனன் சிற்பங்கள் காணப்படுகின்றன. கோயிலின் கிழக்குப் பிரகாரத்தில் தக்ஷிணுமூர்த்தி சந்நிதி உள்ளது. அதை அடுத்து வசந்த மண்டபம் உள்ளது. அதனுடைய மேற்கூரை கற்கூரையால் ஆனது. அதன்மேல் 12 ராசிகளும் நவக்கிரகங்களும் காணப்படுகின்றன. வசந்த மண்டபத்தின் பின்புறம் நீலகண்ட விநாயகர் சந்நிதி உள்ளது. இக்கோயிலின் தெற்குப் பிரகாரம் மிகவும் பெரியது. இப்பிரகாரத்தில் பிச்சாடனராய் இருக்கும் கங்காளநாதரின் கோயில் உள்ளது. அதனை அடுத்து கைலாசநாதரை தரிசிக்கலாம். கூரை கற்கூரையால் வேயப்பட்டுள்ளது. கைலாசநாதர் லிங்கவடிவில் தோன்றுகிறுர். மேற்குப் பிரகாரத்தில் சேர வாசல் சாஸ்தா எனும் ஐயப்பனின் சந்நிதி உள்ளது. அதன் மறுகோடியில் இராமரைத் தரிசிக்கலாம். அதன் எதிரே 18 அடி உயரத்தில் விஸ்வ ஆஞ்சநேயரைத் தரிசிக்கலாம். வடக்குப் பிரகாரத்தில் முருகனின் கோயில் அமைந்துள்ளது. அதன் பிறகு ஜயந்திஸ்வரக் கோயில்களைக் காணலாம். இங்கு நாராயணேஸ்வரர், மகாதேவர், இராமேஸ்வரர் ஸ்ரீ சக்கரம், துர்க்கை, கண்ணன் போன்றவர்களுக்குத் தனித்தனியே சந்நிதிகள் உண்டு.

வடக்குப் பிரகாரம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. நான்கு பெரும் இசைத்தூண்கள் உள்ளன. 7 தந்திகள் உள்ளன. கையால் தட்டினுல் சப்த சுரங்களையும் தனித்தனியே கேட்கலாம். இதனையடுத்து 25 சிறு தூண்களும் உள்ளன. இங்குள்ள அலங்கார மண்டபத்தின் அருகே தேவி அறம் வளர்த்த நாயகி எல்லோருக்கும் அருள்

பாலித்துக்கொண்டிருக்கிறாள். இங்கு சித்திரைப் பை ஒன்றுள்ளது. இதனையடுத்து கல்யானைகள் நம்மை வரவேற்கின்றன. ஊர்த்துவ தாண்டவர், ஆனந்த நடம் புரியும் சக்தி, வியாக்கிர பாதர், பதஞ்சலி, அனுமன் போன்றவர்களின் சிலைகள் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. கிழக்குப் பிரகாரத்திற்கு நாம் வந்தவுடன் நம் மண்ணுணர்வுகளையெல்லாம் விண்ணுணர்வாக மாற்றிவிடுகிறது. 12 அடி உயரமுள்ள மாக்காளை தாணுமாலயனின் எதிரே உள்ளது. இக்கோயிலின் புராதன இடம் கொன்றையடிநாதன் வீற்றிருக்கும் இடமாகும். கொன்றை மரம் இதன் தல விருட்சமாகும். பிரம்மா, விஷ்ணு, ஈசுவரன் மூவரும் லிங்க வடிவில் உள்ளனர். லிங்கம் தங்க கவசத்தால் மூடப்பட்டுள்ளது. உத்தமி அனுசூயாவின் வேண்டுகோளுக்கு இணங்கி மூவரும் இங்கு லிங்க வடிவில் உள்ளனர். இதன் சந்நிதிக்கு அடுத்து 6½ அடி உயரத்தில் கருடாழ்வார் விஷ்ணு கோயிலைக் காணலாம். கொடி மண்டபம் இங்கு அழகாக உள்ளது. இதன் அருகே சாட்சி விநாயகர் இருக்கிறார். அதனையடுத்து ஆட்கொண்டான் உய்யக்கொண்டான் என்ற இருபெரும் துவார பாலகர்களைக் காணலாம்.

அதனுள்ளே செண்பக மண்டபம் உள்ளது. அங்கே மகா பாரதம், ராமாயணக் கதைகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. அதனைக் கடந்து தாணு மாலயன் சந்நிதிக்கு வருகிறோம். இதுவே மூலஸ்தானமாகும். இதை வடகேடம் என்றும் கூறுவர். அர்த்த மண்டபத்திலிருந்து கருவறையில் லிங்க உருவில் தாணு மாலயனை கண்ணார தரிசிக்கலாம். லிங்கம் தங்க கவசத்தால் மூடப்பட்டுள்ளது. தாணுமாலயனின் வலப்புறம் தெக்கேடம் எனப்படும். இங்கு விஷ்ணு கோயில் 7½ அடி உயரத்தில் உள்ளது.

சுசீந்திரம் பக்திக்கு சிறந்த இடம். தவம்புரிவதற்கு ஏற்ற இடம். யோகிகளுக்குப் புகலிடம், இக்கோயிலில் மார்கழி, சித்திரை மாதங்களில் 10 நாட்கள் விழா நடைபெறும். சைவர்களும் வைணவர்களும் வேற்றுமை பாராது ஒன்றிணைந்து வணங்கும் ஒரே சந்நிதானம் தென்னகத்தில் இதுவேயாகும்.



# ஆசை அறுமின்கள்!

கோ. முத்துப்பிள்ளை, பி., ஏ.

அவா என்னும் சொல்லை எடுத்துக் கொள்வோம். இதை ஆசை என்றும் வழங்குகின்றோம். இரண்டே எழுத்துக்களால் ஆகிய சொல் இது. இவ்வுலக மக்களை இந்தச் சிறிய சொல் படுத்தும் பெரும்பாட்டைப் பகரவும் இயலுமோ?

அனைத்துத் துன்பங்களுக்கும் ஆசைதான் காரணம் என்பதைப் புவியிலுள்ளோர்க்கெல்லாம் புரியவைத்தார் புத்தர். வையகம் வாழ் வாங்கு வாழ வழிவகுத்த வள்ளுவரும், அவாவை அறவே அறுத்து விடவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகத் தனி அதிகாரத்தையே அமைத்துக் கொடுத்துள்ளார். அவாவினை அறவே அறுத்து விட்டால் அனைத்து நலங்களும் தாமாகவே ஊற்றெடுத்து ஓடிவரும் என்கிறார் அவர்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆயிரமாயிரம் பெரியோர்கள் அளவற்ற அறிவுரைகளை வழங்கியிருந்துங்கூட, நாம் ஆசையை விட்டு ஒழித்தோமா?

ஒரு பொருளைப் பெற்றுவிட்டால் இன்னொரு பொருள் மீது மனம் செல்லும். அதையும் பெற்றுவிட்டால், அடுத்த ஒரு பொருள்மீது ஆசை ஓடும். மிதிவண்டி வாங்கிய பின்னர், 'விரைந்தோடி' (Scooter) மீது சிந்தனை செல்லும். அதனையும் பெற்றுவிட்டால், மகிழுந்துவின் (Plesurecar) மீது மனம் படரும். ஆசை என்னும் நுண்பொருளுக்கு ஓய்வு என்பதே கிடையாது.

ஆசையின் இயல்பே அடங்காமைதான். ''ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல்லாம் கட்டி ஆளினும் கடல்மீதிலே ஆணை செலவே நினைவர்'' என்று பாடுகிறார் தாயுமான அடிகள். அடங்கா ஆசையை அடக்குவதற்கு ''அறிவு'' என்னும் போர்க் கருவி தேவையாகும். இந்தக் கருவியைப் பெற்றிருப்பவர்கள் மட்டுமே ஆசையைப் புறங்காண முடியும்.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் மூன்று ஆசைகளும் நம்மை வாட்டி வதைக்கின்றன. இந்த மூன்று

ஆசைகளையும் முனிந்தவர்களை முனிவர்கள் என்கிறோம். அந்த நிலைக்குச் செல்ல இயலாத நம்மையெல்லாம் ஆசை அளவின்றி ஆட்டிவைக்கின்றது.

ஒரு குடும்பத்தில் மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களுடைய தந்தை, தாம் வாழும் நாட்கள் வரையிலுமாகிலும், தம்முடைய குழந்தைகள் ஒன்றுபட்டு வாழ வேண்டுமென்று பெரிதும் விழைந்தார். ஆனால் மூத்த மகனோ விடுவதாக இல்லை. நிலத்தை உடனே பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று போர்க்கொடி உயர்த்தினன்! தந்தை இணங்க வேண்டியதாயிற்று. பிரித்துக் கொடுத்து விட்டார். பிரித்துக்கொடுத்த அவர், அதிர்ச்சி தாங்காமல் பிரிந்து சென்றார்! மைந்தனின் மண்ணாசை, தந்தையைத் தகர்த்து அவரை மண்ணுக்கே அனுப்பிவிட்டது.

சிறந்த படிப்பாளி ஒருவர், நல்ல வாய்ப்புகள் அவரை நாடிவந்தன. அவர் பெரிய பதவியில் அமர்ந்தார். ஆனால் அவரிடம் பெருங்குறைபாடு ஒன்று இருந்தது. அவர் தையலரின் மையலிலே தாழ்ந்து போகக் கூடியவர். தாம் வகிக்கும் பெரிய பதவியை மறந்தார். ஒரு பெண்ணின் அழகைக் கண்டு மதிமயங்கினார்! விளை வினை விளக்குதல் வேண்டுமோ? ஒப்பரிய பதவி அவரைவிட்டு ஓடிவிட்டது! பெயரும் மாசுபடிந்த பெயராக மாறிவிட்டது. பெண்ணாசை அவரை அடியோடு சாய்த்துவிட்டது.

பெரிய நகர்களிலே தனித்தனிக் குடியிருப்புகள் (Colonies) பெருகி வருகின்றன. திரும்புமிடமெல்லாம் திருடர்கள் நடமாடும் இடங்களாக இவை திகழ்ந்து வருகின்றன. தங்கச் சங்கிலியைக் கழுத்தில் அணிந்து தனியே செல்ல வேண்டாமென்று கணவன் அன்புரை கூறினான். ஆனால் மனைவிக்கோ நகையின்றி நடமாடவே முடியவில்லை. இதன் பிறகு அந்த நகை சென்ற மாயம் குறித்துச் சொல்லத் தேவையில்லை. அந்தப் பெண்ணுக்கு இருந்த பொன்னாசையை விடத் திருடனுக்கு இருந்த பொன்னாசையே மிகப்பெரிதாய் அமைந்துவிட்டது.

ஆசையால் விளையும் அல்லல்களை அலசிப்பார்த்த திருமூலர், "ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்" என்று அறுதியிட்டு உறுதியாகக் கட்டளையிடுகின்றார். "நான் எல்லா ஆசைகளையும் விட்டுவிடுகிறேன்.

# வாழ்க்கை

என்றென்றும் வாழத்தகுந்த நிலையான இடத்தை அறிந்து ஒழுகுபவனே வாழ்ந்தவன் ஆவான்

— ஓர் அறிஞர்

எவ்விதம் வாழ்ந்தாலும் உலகம் தன் கண்களை இமைக்காமல் நிலைகுத்தப்பார்க்கிறது; வாழ்ந்தாலும் ஐயோ வென்கிறது, தாழ்ந்திடினும் சீ என்கிறது — ஓர் அறிஞர்

உழைப்பு, துக்கம், மகிழ்ச்சி இம் மூன்றையும் மனிதன் அனுபவிக்கப் பிறந்தவன். இந்த மூன்று மில்லாத வாழ்வு சரியான வாழ்வாகாது.

—பழமொழி

வாழ்வு சிந்திப்பவனுக்கு இன்ப நாடகம்; உணர்பவனுக்குத் துன்ப நாடகம். —வால்ப்போல்

வாழ்வு வாழத்தகுந்ததா? அது வாழ்வாரைப்பொறுத்தது.

— அனன்

வந்ததோர் வாழ்வும் இந்திரஜாலக்கோலம்.

— தாயுமானவர்

வாழ்வைக் குடங்கவிழ் நீரோட்டமென்றே யிரு.

— பட்டினத்தடிகள்

வெளிப்புறத்திலும் உட்புறத்திலுமுள்ள பிரகிருதியை அடக்கி, ஆத்மாவின் அந்தத் தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே வாழ்வின் பெரும் பயனும்.

— சுவாமிவிவேகானந்தர்

எல்லாக் கலைகளையும்விட வாழ்வுக்கலை ஒன்றே மிகப்பெரிது

— மகாத்மா

வாழ்க்கையில் நமக்கு என்ன வேண்டும்?
நல்ல உடல் நலமும், போதிய வருவாயும், அத்துடன் நல்ல நண்பர்களும் தேவை. — ஸ்டீபன்சன்

அச்சம் தவிர்ந்தது வாழ்வு; நல் அன்பில் விளைவது வாழ்வு.

— பாரதிதாசன்

பிறர் அடைகின்ற மகிழ்ச்சியைப் பார்த்து மகிழ்ச்சியடையப் பழகு. அதுதான் உண்மையான மகிழ்ச்சியாகும். அதுமட்டுமல்ல, இத்தகைய மகிழ்ச்சி ஒன்றுதான் உனது வாழ்க்கையை அழகு செய்யும்.

— கி. ஆ. பெ. விசுவநாதம்

மனித வாழ்க்கை ஒரு யாத்திரை. — பிளேட்டோ

Registered at the G. P. O. as a Newspaper M. L. 359,00.

Paramu Ganeshapillai

## தை மாத விஷேடங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 15 | செவ்வாய் | தைப்பொங்கல் |
| ... | 17 | வியாழன் | அமாவாசை |
| .... | 20 | ஞாயிறு | அப்பூதியடிகள் |
| .... | 21 | திங்கள் | சதுர்த்தி |
| ... | 26 | சனி | கார்த்திகை |
| ... | 28 | திங்கள் | ஏகாதசி |
| ... | 29 | செவ்வாய் | கண்ணப்பர் |
| ... | 31 | வியாழன் | பூரணை-தைப்பூசம் |
| பெப்ரவரி | 4 | திங்கள் | சண்டேசுரர் |
| ... | 9 | சனி | திருநீலகண்டர் |

## ஆத்மஜோதி ஆண்டுச் சந்தா

| | |
|---|---|
| இலங்கைக்கு | ரூபா. 15·00 |
| இந்தியாவுக்கு | ரூபா. 20-00 |
| இதர நாடுகள் | 5 வெள்ளி |
| ஆயுள் சந்தா | ரூபா. 300-00 |
| தனிப் பிரதி | ரூபா. 1-25 |

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி - (ஸ்ரீ லங்கா)

ஆசிரியர்: நா. முத்தையா
அச்சுப்பதிவு: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் - நாவலப்பிட்டி.
அச்சிட்ட திகதி: 15-1-80.